# தென்மொழி

நடை நடப்பீர்—வீர—நடை நடப்பீர்!
நாடு கேட்பீர்—தமிழ்—நாடு கேட்பீர்!
படை திரட்டிப் பரணி பாடிப்
பாய்ந்து வீரம் தோய வந்து
நடை நடப்பீர்!—வீர—நடை நடப்பீர்!
நாடு கேட்பீர்—தமிழ்—நாடுகேட்பீர்!

அணிவகுப்பீர்—வீர—அணிவகுப்பீர்!
ஆட்சி கேட்பீர்—தமிழ்—ஆட்சி கேட்பீர்!
துணிவு தோயும் தோழன் மாரே,
தோழி மாரே, விரைந்து வந்து,
அணி வகுப்பீர்—வீர—அணி வகுப்பீர்!
ஆட்சி கேட்பீர்—தமிழ்—ஆட்சி கேட்பீர்!

சுவடி: 12.
ஓலை: 7.

விலை: ஓர் உருபா.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 449 :** பேரன்புடையீர் ! தாங்கள் தமிழ்த்தாயின் அருள் பெற்று எல்லா வளமும் பெற இறைஞ்சுகின்றேன். இன்றும் பல தொல்லேகளுக்கிடையே நம் கொள்கையைப் பரப்பிக் கொண்டிருக்கின்றேன். அதற்குத் தூண்டுகோலாக இருப்பது தங்களது புரட்சி மிக்க ஆசிரியவுரை தான். ஐயா. என்னுடைய பெயரை "விடுதலே நாடன்" என்று மாற்றியுள்ளேன். இந்தப் பெயரைப் பார்க்கின்ற அஞ்சலகப் பார்ப்பனர்கள், என்னே மேலும் கீழுமாகப் பார்க்கின்ருர்கள். என் கையில் உள்ள தனித்தமிழ் இதழ்களேப் பார்த்தவுடன் வெறுப்புடன் திரும்பிக் கொள்கின்ருர்கள்.

—சு. முத்துராமலிங்கம், மதுரை.

**0 : 450 :** அண்மை ஆசிரியவுரைக் கண்டு வருந்தினேன். அறிவியல் வளர்ந்த காலம்.......பூக்களேயும் காய்கனிகளேயும் அறிவியல் முயற்சிகளினுல் மாற்றமுடியும்.........மரச்செழிப்பும் இயலும் ! 'அறுக்கப்பட்ட செங்கல்லாக' இருப்பது தான் இயற்கைக்கு முரணுனது. ஆனுல், மறுமலர்ச்சிக்கேற்ற கொள்கை மாற்றங்கள 'உயிர்ப் பிறவிகளின் மாறுபாட்டையும்' தன்மையது — இயற்கை வளர்ச்சி நிலே 'அறுக்கப்பட்ட செங்கல்லே' வீடாகி விடாது ! அவ்வாறு எண்ணுவது தன்னிலேப் பற்றிய 'மயக்கம்'. எனவே, 'இயக்கவொழுக்கமுடையவர்கள்' (! ?) தன்னலத்துடன் செயல்படும்போதும், மறுமலர்ச்சிக்கேற்ற கொள்கை மாற்றங்களே ஏற்றுக்கொள்ளா நிலேயிலும், புதிய இயக்கங்கள் தோன்றத்தான் செய்கின்றன. இது இயற்கை வளர்ச்சி நிலே ! இவ்வுண்மைகளே உணராது எழுதியுள்ள ஆசிரியவுரையும், இதழில் செருகப்பட்டுள்ள 'பாவாணர்' மற்றும் 'தென்மொழி அன்பர் குழு' அறிக்கைகளும் தங்களின் உண்மை நிலேயைத் தெளிவுறுத்துகின்றன ! நன்றி !

—கோ, மணிவாசகம், சென்னே, 600006.

**0 : 451 :** அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணங்குகிறேன். 'தென்மொழி' கண்டேன் மகிழ்ச்சி, ஆசிரியவுரையில் தங்கள் பேருள்ளத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றீர்கள். மிகவும் நன்றி. தமிழர் தம் போக்கைப் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றீர்கள். தாறுமாருன தமிழியக்கங்கள் தோன்றிக் கொண்டிருப்பன இந்தத் தமிழ்க் குமுகாயத்தை எத்தனைக் கேடுகளுக்கு ஆளாக்கவேண்டுமோ அத்தனைக் கேடுகளுக்கும் ஆளாக்கி விட்டிருக்கின்றன. அவை ஏன் தோன்றியுள்ளன என்பதற்குப் பொருத்தமான காணியங்களேக் கூறியிருக்கின்றீர்கள் ! அவை அனேத்தும் நிலேக்குமானுல், "நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ள ஒவ்வொரு கருத்து மாறுபாட்டிற்காக ஒவ்

[அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.]

## திருவள்ளுவர் கிறித்தவரா?

அருஞ்சொல் சித்திரங்கள் வரையும் பெருஞ்சித்திரப் பெருந் தகையீர், என் வணக்கம். இந்தி மீண்டும் தலைநீட்டின்,—வால் காட்டின், மூண்டெழுவோம்; முறியடிப்போம். என் முதிர் அகவையில் — நோயுற்றுச் சாவதிலும் — தமிழ்த்தாய் பெற்ற பிள்ளைதான் இவன் எனச் சாவது நல்லது; இனியது' வரட்டும் பார்ப்போம்!! நிற்க, "பூட்டறுக்கப் புறப்படுவீர்" எனும் பாத் துமுக்கியைப் படித்து மகிழ்ந்தேன். நன்றி மகிழ்வீந்தமைக்கு!

திருவள்ளுவர் கிறித்தவர்—எனப் புலவர் மு. தெய்வநாயகம் 10 நூல்கள் வரை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றைப் பெரி தும் ஊக்கி, வருபவர்கள் — பல கிறித்தவ நிறுவனத்தார். மேலை நாட்டுப் பணமும் வந்து குவிகின்றது. இக் கும்பல்—பணம் தின்ன என்னையும் அழைத்தது; நான் அப்பணம்—என்னைப் பிணமாக்குமென் றேன். இப்போது "குறள்—ஒரு கிறித்தவ நூல்" என்று — சென் னைத் தலைமைப் பேராயர் (Arch Bishop) அருட்டவப் பெருந்திரு. ஆர். அருளப்பர் — அறிவர் (Dr.) ஒரு நூல் எழுதியுள்ளார் ஆங் கிலத்தில். எனவே, இவற்றை மறுத்து — ஒரு கட்டுரை மட்டுமே எழுதி யுள்ளேன்; பல மேடைகளில் மறுத்தேன், இப்போது ஒரு நூலாக அமைத்துள்ளேன்.

மேலும், கிறித்தவக் கலைத்தொடர்பு நிலையம், சென்னையில் — முன்னர் ரூ. 10,000 செலவிட்டு—வள்ளுவர் கிறித்தவர் என மாநாடு சென்னையில் நடத்தினர்; நாடறிந்த நற்பெரும் புலவர் பலர் கலந்து கொண்டனர்; மறுத்தனர். ஆனால் நூல் ஒன்றும் வெளிவரவில்லை. இதனை எதிர்ப்பது—இந்தி எதிர்ப்பிலும் சிறப்பது; "குறள் — உயிர்ப்பு", நமககு.-பேரா. வி- சொல்லழகனார், இறையியல் கல்லூரி, மதுரை-1.

# 3ஆவது தமிழக விடுதலை மாநாடு

3-ஆவது தமிழக விடுதலை மாநாட்டைத் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் பெரிய ஊர்வலத்துடன் நடத்த பெருமளவில் திட்டமிடப் பெற்று வருகிறது, விரைவில் மாநாட்டுச் செயற்குழுவின் பெயர்கள் அறிவிக்கப்படுவ துடன், விரிவான அறிக்கையும் வெளியிடப்பெறும். எனவே மாநாட்டுப் பணிகளில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, பங்கு கொள்ள விரும்பும் விடுதலை மறவர்களும், செயற் குழுவில் பணியாற்ற விரும்பும் முன்னணி வீரர்களும் உடனடியாகத் தாங்கள் பெயர்களையும், முகவரிகளையும், தக்க விளக்கங்களுடன் மாநாட்டு அமைப்பாளர்க்குத் தனி மடல் வழி அறிவிக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.

மே/பா. தென்மொழி,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

1—6—75.

பெருஞ்சித்திரன்,
அமைப்பாளர்.
3 ஆவது
தமிழக விடுதலை மாநாடு.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

# தென்மொழி

இலக்கிய இதழ்

[நிறுவனம் தி.பி: 1990 (1959)]

**சுவடி: 12. ஓலை: 7.**

மேழம்.-விடை-தி. பி. உ௲௬-சூன்.-'1975.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5 தமிழகம்.


---

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலை தூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---

# புதுவைப் பாவேந்தர் சிலை!

## ஓர் எச்சரிக்கை!

புதுவையில், கடற்கரையில், காந்தி சிலைக்கு நேராக, முன்னர் துய்ப்ளேக்சு சிலை இருந்த இருக்கையில், தி.மு.க. ஆளுமையில் உள்ள பொழுது. பாவேந்தர் சிலை ஒன்று வைக்கப்பெற்றது. அதனை இப்பொழுது அந்த இடத்திலிருந்து அகற்றிவிட்டு, வேறோர் இடத்தில் வைக்கப் போவ

தாகவும், அந்த இடத்தில் நேரு சிலையை வைக்கப் போவதாகவும், புதுவை நகரமன்றம் திட்டமிட்டுள்ளதாம்.

பொதுவாகவே வடநாட்டவர்கள் சிலைகளும், தெருப்பெயர்களும் தமிழ்நாட்டில் ஏராளம்! ஆனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்திந்தியப் பெருந் தலைவர்களுக்குக்கூட வட நாடுகளில் சிலைகளோ தெருப்பெயர் களோ அறவே இல்லை என்பதை நாம் அனைவரும் அறிதல்வேண்டும். இந்த நிலை ஒன்றே தமிழ் நாட்டவரின் ஏமாளித் தனத்தையும், வட நாட்டவரின் கரவான ஆளுமைத்திறத்தையும் தெளிவாக நாம் அறிந்து கொள்ளப் போதுமான சான்றாகும். இந்த நிலைகளின் தொடர்ச்சி யாகவே, இப்பொழுது பாவேந்தர் சிலை யகற்றப்படுவதும், அவ்விடத் தில் நேரு சிலையை வைக்க முயற்சி செய்யப்படுவதும் நடைபெறப் போகின்றதாக நாம் உணர்தல் வேண்டும். இந்த நிலைக்கு இடங் கொடுப்போமானால், இனி இந்நாட்டில் தமிழ்த் தலைவர்களின் சிலைகளை வைப்பதற்கே கூட தடை வந்தாலும் வரலாம். எனவே, இந்த நிலை யில் நம் உரிமையையும் மதிப்பையும் காப்பாற்றிக்கொள்ள வேண் டியது மிகவும் இன்றியமையாத தாகும்.

பாவேந்தர் இந்த நாட்டின் ஓர் இலக்கியப்பாவலர் என்பதைவிட, இந்த நாட்டின் அடிமைத்தனத்திற்கே சாவு மணியடித்து, விடுதலைக்கு வித்திட்ட பாவலர் என்பதிலேயே நமக்குப் பெருமையும் பெருமிதமும் உண்டு. அத்தகைய உரிமையுணர்வுப் பாவலர் ஒருவரின் சிலையை ஒரு நாலாந்தரப் பாவலனின் சிலைபோல் கருதி நடந்துகொள்ள நினைப்பது, நமக்குப் பெருத்த இழிவும், நம் அடிமை மனப்பாங்கிற்கு உறுதியும் சேர்ப்பதாகும். இவ்வகையில் புதுவை ஆளுநர் மக்கள் உணர்வையே பெரிதாக மதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின் றோம். மதிப்பார் என்றும் நம்புகிறோம். அவர் அவ்வாறு மதித்து அவர் சிலைக்கு எவ்வகையான இடமாற்றமும் அதன் வழி இழிவும் நேரா வண்ணம் தம் ஆட்சித் திறத்தைக் கட்டிக் காத்துக்கொள்வார் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழர்களுக்குப் பாவேந்தர் பாரதிதாசனை விட நேரு அவ்வளவு பெரியவருமல்லர். பெருமை உண்டாக்கியவரும் அல்லர். அவர் இந்த நாட்டின் முதலமைச்சராகவோ, விடுதலை முயற்சிகளில் பங்குகொண் டவராகவோ இருக்கலாம். ஆனால் அந்த நிலைகள், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தமிழர்களின் அடிமைத் தனத்தையும் வடநாட்டினர் மேலாளுமையையும் உறுதி செய்வதற்கு உதவிய செயல்களாகவே கருதப்படும். அதேபோல்தான் காந்தியும் தமிழர்களின் அடிமைத் தனத்திற்கும், தமிழகத்தின் உரிமை யெதிர்ப்புக்கும் வலிவூட்டியவரே யாவர். எனவே, தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற அளவில் பாவேந்தர் பாரதிதாசன் மதிப்பிடற்கரிய, பெருமை மிக்க ஒரு விடுதலைப் பாவலர் ஆவார். அவர் பெயருக்கு இழிவு நேரும் எந்தச் செயலை யும் தமிழர்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். எனவே, பாவேந்தர் சிலையை இப்பொழுதுள்ள இடத்திலிருந்து அகற்றவோ, வேறு ஓர் இடத்தில் கொண்டுபோய் வைக்கவோ, இப்பொழுதுள்ள குடியரசுத் தலைவர் வழிநிற்கும் ஆளுநர் ஆட்சி இசைவளிக்கக்கூடாது

என்று கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறு அந்தச் சிலை ஆளுநரின் அதிகாரச் செருக்கால் அவ்விடத்தினின்று அகற்றப்பட்டு அவமானப் படுத்தப்படுமானால், புதுவை மாநிலத்தில் உள்ள அத்தனைக் காந்தி சிலைகளும், நேரு சிலைகளும் அவ்வவ் விடங்களிலிருந்து அகற்றப் படுவதுடன், அடித்து நொறுக்கித் தூள் தூளாக்கப்படும் என்றும் எச்சரிக்கின்றோம் !

—பெருஞ்சித்திரன்.

# தாறுமாறான தமிழியக்கங்கள் - 3.

இனி, இயக்கங்களின் உள் உடைவுகளுக்குஅடுத்த பெருங் கரணியமாக நிற்பது, புகழ்க் காழ்ப்பு எனும் மனக் கிளர்ச்சியே. இவ் வுணர்வு எவ்வளவு சிறியவரானாலும எத்துணைப் பெரியவரானாலும் அவ்வவ்வளவில் உள் நின்று ஆட்டிவைக்கும் தன்மை வாய்ந்தது. தம் மோடு நெருங்கிய வீடுகளில் வாழ்ந்தோ, ஒரே தெருவில் குடி யிருந்தோ, ஒரே ஊரினராகவோ, ஒத்த கல்வியும், ஒத்த அகவையும் உடையவராகவோ, அல்லது ஒரே இனத்தவராகவோ, குலத்தவ ராகவோ சமயத்தவராகவோ, அல்லது தம்மினும் இவ்வெல்லா நிலை களிலும் தாழ்ந்தவராகவோ ஒருவர் இருந்து, அவருக்கு ஏதோ ஒரு வகையில்—கல்வியினாலோ, பண்பினாலோ, பணத்தினாலோ, பொது முயற்சிகளினாலோ, அரசியல் ஈடுபாட்டினாலோ,—புகழ் வருவதாக இருந்தால், அடுத்தவருக்கு அவர்மேல் புகழ்க் காழ்ப்பு ஏற்படலாம். இந்தப் புகழ்க் காழ்ப்பும ஒருவகையில் பொருள் நசையை அடிப்படை யாகக் கொண்டதாக இருககலாம். மேலும் இதுவே அடிப்படையாக வேறு சில கருத்து வேறுபாடுகளோ போட்டிகளோ தோன்றலாம். ஆனால் ஒருண்மையை நாம் நினைவு கொள்ளுதல் வேண்டும். புகழ்க் காழ்ப்பு மட்டும் அறிவுக் குறைவினாலோ, திறமைக் குறைவினாலோ, பண்புக் குறைவினாலோதான் ஏற்படவல்லது. அத்தகைய மன நோயாளிகளைத்தான் இந்தக் காழ்ப்புணர்வு எளிதே கவ்விக்கொள் ளும். இன்னும், புகழ் பெறுபவன் தம்மினும் இளையவனாகவோ, தன் இனத்தினும் சற்றுத் தாழ்ந்த இனத்தவனாகவோ இருந்துவிட்டால், காழ்ப்புக் கொள்ளுபவனுக்கு உள்ளுணர்வுகள் பலநூறு மடங்குகள் பெருகிவிடும்.

இந்த உணர்வைத் திருவள்ளுவர் மிக அழகாக, மிகப்பொருத்த மான இடத்தில் வைத்துப் பேசுவார். தாம் இணைந்து, மனம் ஒத்துத், துணையாக இருந்து பணியாற்றப்போகும் அமைச்சர்களுக்குக் கூறுவ தாக இதைக் கூறுகிறார். அஃதாவது, தாம் அமைச்சராக இருக்கக் கூடிய அரசர் தம்மினும் இளைய அகவையுடையவராகவோ, வேறு இனத்தினராகவோ இருந்தாலும், அவரை அக்கரணியங்களுக்காக இகழாமல், என்றும் நிலைத்து நிற்கும் பேரொளியாகிய இறைவனுக்குச் சமமாகக் கருதி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பார்.

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். —(குறள் : 698.)

—என்பது அவர் அறிவுரை.

மனக் காழ்ப்புக் கொள்ளுவதால் மூன்று அறிவு நிலைகளை மாந்தன் இழந்து போகின்றான், உயர்வு தாழ்வு அறியும் பகுத்தறிவு, பொது மாந்தவுணர்வுக்குத் தேவையான அன்புடைமை, உலக ஒப்புரவுக்குத் துணையாக நிற்கும் நடுவு நிலைமை ஆகிய இம்மூன்று நல்லுணர்வுகளையும் இப் புகழ்க் காழ்ப்பு ஒழித்துவிடக் கூடியது. இந் நல்லுணர்வுகள் அழிந்துபட்டவுடன் தன்னலவுணர்வு உள்ளம் முழுவதையும் ஆட்கொள்ளுகின்றது: அத் தன்னலவுணர்வின் எண்ணக் கனப்புகள் எப்பொழுதும் அவனை காய்ச்சி வருத்தி அமைதியிழக்கச் செய்கின்றன. அதனால் அவன் எப்பொழுதும் துன்புற்றவனாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றான். மன நோயாளியாகக் காட்சியளிக்கின்றான். அவன் எப்பொழுதும் எவரிடத்தும் வாய்திறந்து உரையாடுவதில்லை; மனம்விட்டுச் சிரிப்பதில்லை; பலரையும் அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை, தான் காழ்ப்புக் கொண்டவனை ஓர் எதிரியைப் போல் கருதுகிறான். அவனைப் பற்றியே பலரிடமும் பேசுகிறான்; அவனைப் பாராட்டுகின்ற மக்களை அவனுக்குத் துளியும் பிடிப்பதில்லை; அவர்களை அவன் அறவே வெறுக்கின்றான். அவன் தெருவில் நடக்கையிலும், பிறரிடம் பேசுகையிலும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே நடக்கின்றான். மிகவும் மெதுவான குரலில் ஒரு நோயாளியைப் போலவே பேசுகின்றான். தன் நிலைகளால் நிறைவடையாதவனாக, வெறுப்புற்றவனாகவே நடந்து கொள்கின்றான். இந்நிலையில் அவனிடம் வந்து பேசுகின்ற அவனுக்குச் சார்பானவர்களிடம் தனக்குப் பிடிக்காத அவனுக்கு எதிரிடையான ஓர் இயக்கத்தைத் தோற்றுவிக்கும்படி சொல்லுகிறான். மனவலியற்றவனாகவும், கோழை உணர்வினனாகவும் அவன் இருக்கவேண்டியிருப்பதால், அவனாலேயே ஓர் இயக்கத்தைத் தோற்றுவிக்க முடிவதில்லை.

தனக்கு வேண்டாதவனான அவனைப் பாராட்டுகின்ற நிலைகளே அவன் உள்ளத்தை என்றென்றும் குடைந்துகொண்டிருக்கும். அவற்றின் அழுத்தத்தினின்று மீள, அவன் எதையாவது எழுதிக்கொண்டோ படித்துக்கொண்டே அமைதியாக இருப்பான், பிறனின் புகழ்ச்சிநிலைகளைப் பொறுத்துக் கொள்ளாத அவன் உள்ளம் தன்னையும் எவராகிலும் பாராட்டமாட்டார்களா என்று ஏங்கித் தவம் கிடக்கின்றது, அப்படி ஓரிருவரைக் கொண்டு தன்னைப் பாராட்டவும் செய்கிறது. தன் தகுதியை உயர்த்தியும், தான் காழ்ப்புக் கொண்டவனின் தகுதியைத் தாழ்த்தியும் பேசுபவர்களையே தன் உற்ற நண்பர்களாகக் கொள்ளச் சொல்கின்றது, அந்நிலை வளர்கின்றபொழுது கிளையியக்கத் தோற்றம் மலர்ச்சி கொள்கின்றது. நிலைகள் பலவானால் இயக்கங்களும் பலவாகின்றன,

இந்நிலைகள் தமிழகத்தில் அளவிறந்து காணப்பெறுகின்றன. தொடக்கத்தில் தென்மொழியியக்கத்திற்கும் இவ்வுணர்ச்சித் தாக்குதல்கள் இருந்தன. இப்பொழுதும் அளவிறந்து காணப் பெறுகின்றன. அவ்வாறு தென்மொழி வளர்ச்சியில் காழ்ப்புற்றவர்களெல்லாம் வேறு வேறு கரணியங்களைச் சொல்லி வேறு வேறு இயக்கக் கூறுகளை அமைத்துக் கொண்டார்கள். இன்றும் அந்த நிலைகள் நீடிக்கின்றன. தென்மொழிக்கு முன்பு துணை நின்ற மூன்று நான்கு

பெயர்கள் தங்கள் உள்ளுணர்வுகளுக்கெல்லாம் வேறுவேறு வடிவங்களைக் கொடுத்து, தென்மொழி மேலும் ஆசிரியரின் மேலும் பல பழிகளைச் சுமத்தினர். அவர்களில் ஒருவர் தென்மொழித் தொடர்பாளர் முகவரிகளைக் கண்டுணர்ந்து, அம் முகவரிகளுக்கும், தென்மொழியை அறிந்த பிறர்க்கும் தம் காழ்ப்புணர்ச்சியை மடல்களாக வடித்துக்கொண்டே இருந்தார். இப்பொழுதும் அவர் வேலை நின்றபாடில்லை.

சேலத்தில், பாவாணர், கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தபொழுது, அவரது அறிவாற்றலைக் கண்டு காழ்ப்புற்ற தமிழ் விரிவுரையாளர் ஒருவர், பாவாணரை நேரே பார்த்தறியாத—ஆனால் அவர் அறிவுத்திறனை மட்டும் அறிந்த—வெளியூர்த் தமிழன்பர் பலரிடமும் போய்த் தாம்தாம் பாவாணர் என்றும், தாமே சொல்லாராய்ச்சி செய்வதாகவும் கூறி, ஆங்காங்குப் போலி மதிப்பும் பொருள் கொடைகளும் பெற்றதுண்டு. அவர்கள் ஐயுற்றுக் கேட்குங்கால் தாமே தப்புந் தவறுமாக ஓரிரண்டு சொல்லாராய்ச்சிகளையும் அவர் செய்து காட்டுவாராம். கையை ஆங்கில எழுத்து 'எல' (L) போல் வைத்துக் காட்டி, அதனால்தான் முழங்கைக்கு, 'எல்போ' (Elbow) என்று வந்ததென்று கூறுவது அவர் மொழியாராய்ச்சிக் கூறுகளில் ஒன்று. இவ்வாறு ஒரு துறைக்கோ, அத்துறையைச் சார்ந்த ஒருவர்க்கோ ஒருவகைச் சிறப்பு ஏற்பட்டுப் புகழ்வந்ததென்றால், உடனே அத்துறையிலேயே பலரும் ஈடுபடுவதும், அச் 'சிறப்பை'ப் 'பொது'வாக ஆக்குவதும், இன்னும் முயன்று தாமே அதன் பெருமைக்கும் புகழுக்கும் உரியவர்—தகுதிமிக்கவர்—என்று பலரிடமும் பேசித் திரிவதும், தமக்கு ஏதோ ஒருவகையில் கடன்பட்ட ஓரிருவரைக் கொண்டு அவ்வாறு பேசச் செய்வதும்—இவை சார்ந்த பிற அனைத்துச் செயல்களும் புகழ்க் காழ்ப்பால் நிகழும் போலிச் செயல்களே !

இக்கால், இலக்கியத் திறனாய்வாளர்போல் தம்மைக் கருதிக் கொண்டு வெற்றாரவாரக்காரர் சிலர், சில வீண் அலப்பல்களைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கு இலக்கியத் திறனுமில்லை; நடுநிலையுமில்லை; பரந்த உள்ளமும் இல்லை; சிறந்த மெய்யறிவும் இல்லை. பாவாணர் சிறந்த ஓர் இலக்கிய ஆராய்ச்சியாளர்க்கு ஆறு இயற்கைப் பண்புகள் வேண்டும் என்பார். கூர்த்தமதி, பரந்த இலக்கிய இலக்கணப் புலமை, நடுவு நிலைமை, உள்ள உரம், தன்னலமின்மை, மெய்யறியவா ஆகியவை கட்டாயம் தேவை. இக்கால் புகழ்க் காழ்ப்பால் புறப்பட்டிருக்கும் போலித் திறனாய்வாளர்களுக்கோ, இவற்றிற்கு நேர்மாறான தன்மைகளும், பொறாமையும், வெறுப்பும், தன்னலமுமே சிறந்து விளங்குகின்றன,

தமிழ்நாட்டில் இப்பொழுது புகழ்க் காழ்ப்பும், புகழ் வெறியும் அளவுக்குமேல் தலைவிரித்தாடுகின்றன. என்றுமே விளம்பரம் புகழாகாது: இனி, புகழ் என்னும் பொன்றா இசை, ஒருவரின் இறப்புக்குப் பின்னேயே தோன்றுகின்ற காலத்தின் இனிய நினைவாகும். அஃது ஒருவரின் வாழ்வுக் காலத்தில் மலர்வதே இல்லை. அவ்வாறு மலர்வது

போல் தோன்றும் மாயை உணர்வுகள் கானல் நீரைப்போன்றன. ஒருவனின் இலக்கிய ஆக்கமோ, தொண்டுப் பாடுகளோ, காலக் கல்லால் உரைக்கப் பெற்று, மக்கள் மனங்களால் தேரப் பெறுதல் வேண்டும். அப்பொழுதுதான் அது புகழாகும். வெறுமனே வேலை யற்ற சிலர் வாய்க்கு வந்தவாறு எழுதுவதும் பேசுவதும் புகழாகாது; இகழே! தலைக்குப் பெரிதான மகுடங்களைப் பிறர் வைக்கும்பொழுது, அவற்றைத் தாங்கிக் கொள்ளுதற்கு நாம் நாணுதல்வேண்டும். இல்லெனில் அரசனைப்போல் இராது; கோமாளியைப் போலவே இருக்கும். தமிழ்நாட்டில் இன்றைக்கிருக்கும் மிகப் பலர் புகழ்க் கோமாளிகளே! அவர்கள்—வெட்கமிலாது—அறிவுப்புலன் கெட்டுத்—தம்முள் ஒருவர்க்கொருவர் அளவுக்கு மீறிப் புகழ்ந்து கொள்கின்றனர். தமக்கு வேண்டாதவரை அளவுக்கு மீறி இகழ்ந்தும் பேசுகின்றனர். ஒரே ஒருவர் புகழ்வதாலேயே ஒருவர் தகுதிபெற்று விடுவதில்லை. தன் இனத்தையே இவ்வாறு அளவுக்கு மீறிப் புகழ்ந்து கொள்கின்றவனும், அளவுக்கு மீறி இகழ்ந்து கொள்கின்றவனும் தமிழனைத் தவிர, வேறு எவராகவும் இருக்கமுடியாது. புகழ்க் காழ்ப்பாலேயே பல போலி இயக்கங்கள் முளைவிட்டு வளர்கின்றன. ஒவ்வோரியக்கமும் ஒவ்வொரு குழுவாக இயங்குகின்றது, ஒவ்வொரு குழுவும் ஒவ்வொருவரை ஒரே துறையில் போட்டி போட்டுக்கொண்டு பாராட்டித் திரிகின்ற மனப்பாங்கு பெருகிவருகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒருவர் மறைந்துவிட்டால், அவருக்குப் பின் யார்—என்னும் புகழாராய்ச்சி இப்பொழுது நடக்கும் ஆராய்ச்சிகளிலெல்லாம் தலைசிறந்ததும், மிகப் பரந்ததும் ஆகும். புகழ்பெற்ற ஒருவருக்குப் பின் இத்தகைய நிலைகள் பலவாறு நாட்டையும் புகழ் அங்காப்புடைய சிலர் மனங்களையும் அலைக்கழிப்பதுண்டு. பெரும்பாலும், தகுதிக் குறைவானவர்களும், தன்னம்பிக்கை யற்றவர்களுமே இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு அறிவுணர்வுகொண்ட மக்களில் ஒரு பகுதியினரைக் குழப்பி வருகின்றனர். அக்குழப்பத்தில், தங்களையும் பிறர் மதிக்கத்தக்க ஒருவராக உருவாக்கிக் கொள்கின்றனர். பொதுவாக இந்த நிலை இக்கால் ஒரு நாகரிகமாகவே பரவி வருகிறது. பிறநாடுகளில் அமெரிக்காவிலும், இந்தியாவில் முழுமையாகவும் இவ்வுணர்ச்சி மக்களை ஆட்கொண்டுள்ளது.

புகழ்பெற்றவர்களாக விளங்கிய அமெரிக்க அதிபர் கென்னடி, இந்தியத் தலைவர்கள் நேரு, பெரியார் இவர்களுக்குப் பின் பிறங்கடைத் தலைவர்கள் யார் என்னும் புகழ்ப் போட்டிகள் இவ்விரு நாடுகளையும் அலைக்கழித்தன. அரசியல், குமுகாயத் துறைகளில் வேர் கொண்ட இந்நிலைகள், இக்கால் இலக்கியத் துறையிலும் ஏற்பட்டுத் தமிழர்களுக்கு ஒரு தலைவலியாகவே உருவெடுத்து வருகின்றது. இத்தலைவலி சில தன்முனைப்பாளர்களால் பூத உருக்கொண்டு வளர்ந்து வருவதை நல்லறிவாளர்கள் கண்டு வருந்தாமல் இருக்க முடியாது. குறிப்பாக, பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின் இலக்கியத் துறையில் சிறந்து விளங்குபவர் யார் என்னும் புகழ்ப்போட்டி, இத்தகைய உணர்வுகளில் ஒன்றாகும். பாவேந்தருக்குப் பின் யார் என்னும் நிலையை இத்துறையில் ஈடுபட்ட பலரும் உருவாக்கிப் பல

வாறான கருத்துகளையும் வாய் துணிந்து கூறிவருகின்றனர். இவ்வகையில் பலரும் இணைந்து பல குழுக்களாகவே செயல்பட்டு வருகின்றனர். இச்செயல், மிகவும் கவர்ச்சியான ஒருவர் பெயரைச் சொல்லி, அப்பெயருக்குப் பின்னால் தம் பெயரை விளம்பரப்படுத்திக் கொள்ளும் கரவான—இழிவான—ஒரு செயலாகும். கடமையில் கண்ணூன்றாதவர்களும், அழுத்தமான புலமையில்லாதவர்களுமே இதுபோன்ற செயல்களால் தங்களை மூடி மறைத்துக் கொண்டுள்ளனர். பொதுவாகப் பாவேந்தரின் பாணியைப் பின்பற்றி எழுதும் பாவலர்கள் பலருள், ஒவ்வொருவரும் தங்களையே, அல்லது தங்களுக்கு வேண்டியவரையே முதலணியினராகக் கொண்டு விளம்பரப் படுத்திக்கொண்டு வரும் இந்நிலை, இலக்கியத் துறையைப் பொருத்த மட்டில், மிகவும் இழிந்ததாகும்; அருவருக்கத் தக்கதாகும்; நடுவு நிலையற்ற தன்மையை வளர்த்து விடுவதாகும்; ஆராய்ச்சியறிவைக் கொன்று புதைப்பதாகும்; பாவலர் பலர்க்குள்ளும் உட்பகையை விளைவிப்பதாகும்; விரும்பத்தகாத பல இழிநிலைகளை உருவாக்குவதாகும். இந்நிலைக்கு வித்திட்டவர்களுள் முதன்மையானவர் மு. வ. அவர் தாம் எழுதிய இலக்கிய வரலாற்றிலேயே இத்தகைய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளார். பிற்கால இலக்கிய ஆசிரியர்களாக அவர் குறிப்பிடுகின்ற பகுதிகள் பெரும்பாலும் தந்நலப் பிதற்றல்களாகும். இவ்வகையில் இளந்தலைமுறை அறிஞர்கள் தங்கள்மேல் அளவுக்கு மீறி நம்பிக்கை கொண்டு இயங்குவது, முதுபேரறிஞர்களின் பட்டறிவைப் புறக்கணிப்பதாகும். இம்முறை வளர்ச்சியடையப்போகும் அறிவுக் குழுகாயத்தைச் சிதறடிக்கும் செயலாகும். பல்வேறு அறிவுப் பிளவுகளை உருவாக்குவதாகும். எனவே அறிஞர்களும் வரலாற்றாசிரியர்களும் இப் போலி நிலைகளைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருத்தல்வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும்.

பெரும்பாலும், அறிஞர்கள் ஒவ்வொருவரும் சில தனித்தன்மை உடையவர்களாகவே—சில தனி அறிவுக் கூறுகள் வாய்ந்தவர்களாகவே—இருப்பர். அவர்களின் அறிவுக் கூறுகள் ஒவ்வொன்றும் மக்களினத்தின் தனித்தனியான குறைபாடுகள் சிலவற்றை நிறைவு செய்வனவாகவே இருக்கும். இப்படிப்பட்டவர்களை, மேலோட்டமாக மட்டும் கணித்து, ஒருவரை ஈடானவராகவோ பிறங்கடையினராகவோ கருதிப் பேசுகின்ற - ஆராய்கின்ற—செயல்கள் அறிவுடைமையாகா. அப்பேச்சுகள் அறிவுணர்வுகளைத் தகர்த்தெறியும்; அழிவுணர்வுகளையே மக்களிடைத் தோற்றுவிக்கும். புதிய உணர்வுகள் கிளர்ந்து வரும் அறிவூற்றை அவை அடைக்கும். அவற்றால் மக்களினத்திற்கோ அறிவுணர்வுக்கோ ஒரு பயனும் விளையாது. மாறாகத் தீமையையே அவை உருவாக்கும் என்று நலலுணர்வாளர்கள் தெளிந்து கொள்ளுதல்வேண்டும்.

தமிழர்கள் பிளவுபட்டால் மீண்டும் ஆரியம் தலையெடுப்பது உறுதி. தன் மொழியின் மேலும் இனத்தின் மேலும் நாட்டு முன்னேற்றத்தின் மேலும் அன்பு வையாதவன் உலக நலம் பேசுவது ஊரை ஏமாற்றும் செயலே! எனவே, சமற்கிருதத்தினின்று தமிழையும், பார்ப்பனியத்தினின்று தமிழினத்தையும், வடவராட்சியினின்று தமிழகத்தையும் மீட்

# செய்திகள்

## பொன்னம்மாள் குழந்தைகள் பள்ளி சென்னை-61.

கடந்த 16-4-75 காலை $6\frac{1}{2}$ மணிக்கு, நங்கநல்லூர்-சென்னை-61 -இல், பொன்னம்மாள் (சொர்ணம்) குழந்தைகள் பள்ளி ஒன்றை ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் விழாத் தலைமையேற்றுத் திறந்து வைத்தார்கள். செல்வி. க. சாந்தி க.இ. பா வரவேற்புரை ஒன்றைப் படித்தளித்தார். திருவாளர்கள், பி. எம். சுப்பிரமணியன். க.இ.; ப.இ., செம்பியன் (தமிழம் ஆசிரியர்), க. குணசேகரன், இரமணன். க. இ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திரு. பாலசுப்பிரமணியம் நன்றி நவில விழா இனிதே முடிந்தது.

—(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

---

—[முன் பக்கத் தொடர்ச்சி.]

பதைவிட, இக்காலத் தமிழ் இளைஞர்களுக்கு வேறு வேலையிருப்பதாக நாம் கருதுவதற்கில்லை. இப்பொழுதுள்ள பெரும்பாலான தலைவர்களைத் தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் நன்மை செய்பவராகக் கருத முடியாது. அந்நிலைகளைப் பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காமல், வெறும் மன அரிப்புக்கொண்டு, பிறர்போல் காழ்ப்புற்றுப் புகழ்ப் போட்டிகளில் மனந்திரும்பச் செய்வது நாட்டுக்கு நல்லதன்று. மொழிக்கும் இனத்திற்கும் அவற்றால் பெருங்கேடுகளே வரக் காத்திருக்கின்றன. தமிழர் முன்னேற்றமைக்குக் கரணியம், தமிழ் முன்னேற்றமையே! தமிழ் முன்னேற்றமைக்குக் கரணியம் அது தந்நலவுணர்வுள்ளவர்களிடமும் விளம்பர வேட்கையுள்ளவர்களிடமும் பார்ப்பனப் பகைவர்களிடமும் சிக்கிக்கொண்டிருப்பதே என்பதை ஒவ்வோர் உண்மைத் தமிழனும் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். தமிழையும், தமிழினத்தையும் வடமொழிக்கும், பார்ப்பனர்க்கும் அடிமைப்படுத்தி விட்டுத் தமிழர்கள் தமிழ் நிலத்தில் மட்டுமன்றி வேறு எந்த நிலத்திலும் உயர்ச்சிபெற முடியாது. இதை உலகெங்கணும் உள்ள தமிழர்கள் முதற்கண் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

—[தொடரும்]

பெருஞ்சித்திரன்.

## பெரம்பலூர் சரக ஆசிரியர் கழக அனைத்து நடுவங்களின் ஆண்டு விழா.

நிகழும் தி. பி. 2006, மேழம் 8 (21-4-75) காலை, பெரம்பலூர் சரகக் கிழக்கு, மேற்கு, தெற்கு, நடு — ஆகிய நடுவங்களின் ஆசிரியர் கழக ஆண்டுவிழா, திருச்சி, பெரம்பலூர், பாத்திமா பள்ளியில், தலைவர் திரு நா. சுருளிவேலனார் க. ஆ., ப. இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாட்டி து. சகுந்தலா அவர்களின், தமிழ்த்தாய் வாழ்த்துரைக்கும், திரு. இரா. பெருமாள் அவர்களின் வரவேற்புரைக்குப் பின், திரு. சொ. சி. அருணாசலம் அவர்கள், 'தென்மொழி' ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வாழ்த்துப்பா ஒன்றைப் படித்தளித்தார். திரு. எப். சுப்பிரமணியம் அவர்கள் ஆண்டறிக்கை படித்தார். அதன்பின், ஆசிரியர் அவர்கள் " தாய்மொழி வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு " என்னுந் தலைப்பில் அரியதொரு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மாற்றுடைப் போட்டி ஒன்றும் விழா இறுதியில் நடந்தது. திரு அப்துல் அமீது நன்றியுரைக்குப் பின் விழா இனிது முடிந்தது.

## பாவேந்தர் விழா—பூளைமேடு, கோவை.

கடந்த மேழம் 14 (27-4-75) ஆம் பக்கல், மாலை 6 மணியளவில் கோவை, பூளைமேடு, குறளகம் சார்பில் பாவேந்தரின் 85-ஆம் ஆண்டுப் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. தொடக்கத்தில் பாவேந்தர் பாடல்களையும், தென்மொழிப் பாடல்களையும், திருவாளர்கள் ப. வேலுமணி, ப. ஆண்டகை ஆகியோர், இனிய இசைக் குழுவுடன் பாடி மக்களுக்கு எழுச்சியூட்டினர். அதன்பின் 7½ மணியளவில் பேரா. வீ. அரசமாணிக்கனார், க. மு. அவர்கள் தலைமையில், ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள், "உலகத் தமிழரே ஒன்றுபடுங்கள்" என்ற தலைப்பில் அரிய சொற்பொழிவாற்றினார். பின்னர் இரவு 9 மணியளவில், பாவலரேறு அவர்கள் தலைமையில் "பாவேந்தர் பாடற் கருத்துகள் முழுதும் விளைவைக் கண்டுவிட்டன; விளைவைக் காணவில்லை"—என்னுந் தலைப்பில் பட்டிமன்றம் நடந்தது. 'கண்டுவிட்டன' என்னும் அணியில் திருவாளர்கள், ப. குணசேகரன், அருணா அரசகோ, எழிலண்ணல் ஆகியோரும், 'காணவில்லை' என்னும் அணியில் திருவாளர்கள், இறையன், புலவர். ஆதி, துரை. மடங்கன் ஆகியோரும் சொற்போரிட்டனர். இறுதியில் நடுவர் விளக்கவுரையாற்றி, "விளைவைக் காணவில்லை" என்று தீர்ப்பளித்தார். விழா நள்ளிரவு 12-30 மணியளவில் முடிந்தது. நிகழ்ச்சிகளை அவ்வட்டார மக்கள் பெரிதும் பாராட்டினர்.

## தமிழ்த்தொண்டர் ஒன்றியத்தொடக்க விழா, புதுவை

கடந்த விடைத் திங்கள் 11 (25-5-75) ஆம் பக்கல் காலை 10 மணியளவில், புதுவை, அரங்கப்பிள்ளைத் தெரு, 11-ஆம் எண் கட்ட

டத்தில், அருந்தமிழ்ச் செல்வர், திருமுடி சேதுராமன் அவர்கள் தலைமையில், தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள், புதுவைத் தமிழ்த் தொண்டர் ஒன்றியத்தைத் தொடங்கி வைத்தார்கள். திருவாளர்கள், வை. தமிழேந்தி, வெற்றிவேந்தன், தமிழமல்லன், அரிமா மகிழ்கோ, வேணுகோபால், அடியார்க்கருளி, திருக்குறள்பெருமாள், அரிமா இளங்கோ, முதலிய தமிழ் மறவர்கள் சொற்பொழிவாற்றினர். அதன்பின் ஆசிரியர் அவர்கள், தமிழன்பர்கள் ஒன்றுபட்டு இயங்கவேண்டியதன் தேவையை வலியுறுத்தி அரியதொரு சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் தலைவர் அவர்களின் இனிய முடிவுரை வாழ்த்துரைகளுடன் விழா சிறப்புற முடிவடைந்தது.

## பாவேந்தர் விழாவும் தொழிலாளர் நாளும்! புதுவை

கடந்த விடை 11, (25-5-75)-ஆம் நாள் மாலை 7 மணியளவில், புதுவைக் கடற்கரைத் திடலில், புதுவை உ.த.க. சார்பில், பாவேந்தர் விழாவும், தொழிலாளர் நாளும் ஒருங்கே கொண்டாடப்பட்டன. திரு. வை. தமிழேந்தி தலைமை தாங்கி உணர்வுமிக்கதொரு முன்னுரையாற்றினார். அதன்பின், நெய்வேலி உ. த. க. செயலர் திரு. அருட்தவை, திரு. அரிமா. மகிழ்கோ, (புதுவை மாநில உ.த.க. அமைப்பாளர்), திரு. வெற்றிவேந்தன், திரு. அரிமா. இளங்கோ, திரு. அடியார்க்கருளி திரு. திருக்குறள் பெருமாள் ஆகியோர் எழுச்சிமிக்க உரையாற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், அந்நாள் பாவேந்தர் சிலை அகற்றப்பட்டிருப்பதைக் கண்டித்தும், அடுத்து நடைபெறவிருக்கும் வேத எரிப்புப் போராட்டம், விடுதலை மாநாடு குறித்தும் வீறுரையாற்றினார். கூட்டம் இரவு 10½ மணியளவில் இனிதே முடிவுற்றது.

## பொன்னரசு — திருச்செல்வியர் வாழ்க!

கடந்த மேழம் 24 (7-5-75) ஆம் பக்கல், நீலமலை, பெரும்பகல்லாக் குடியிருப்பில், கோவைத் தென்மொழி அன்பர் குழு அமைப்பாளர், திரு. சோ. தமிழ்மகன் அவர்கள் தலைமையில், பொன்னரசு — திருச்செல்வியர் திருமணம், சீர்திருத்த முறையில் சிறப்புற நடந்தது. அவ்விழாவில் கோவைச் சேர் கொற்ற அமைப்பாளர், திரு. மறை - நித்தலின்பனார் அவர்களும், மின்வாரியப் பிரிவதிகாரி, ஆ. பச்சையப்பன் அவர்களும், தமிழ்நலஞ்சார்ந்த நண்பர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினர். விடுதலை மறவர், நா. இளமாறன் அவர்கள் இத்திருமண விழா ஏற்பாடுகள் அனைத்தையும் சிறப்புற அமைத்திருந்தார். மணமக்கள் தம் திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 25 அன்பளிப்பாக நல்கினர். மணமக்கள் இனிதே வாழ்ந்து மொழி, இன, நாட்டு விடுதலைக்குத் துணை நின்று, பெருமை பெற, தென்மொழியும் வாழ்த்துகின்றது.

# வேறென்ன சொல்வது?

0 இந்தியாவின் முதல் செயற்கைக் கோளான 'ஆர்ய பட்டரை' இந்திய அரசு வானில் ஏவியது.
—செய்தி.

0 இந்தியாவில் ஆரியம அழிந்து போகவில்லை என்பதற்கும், அதுதான அரசோச்சுகின்றது என்பதற்கும் இதுவே சான்று.

0 தமிழ்நாட்டில் வறட்சி நீடிப்பது குறித்து இந்திரா வருத்தம்.
—செய்தி.

0 அவர் வருத்தப்படுவதே நமக்கு ஒரு பெருமை!

0 சாதியடிப்படையிலன்றி, பொருளாடிப்படையில் பின்னடைந்த மக்களுக்குச் சலுகை காட்ட இன்னும் நூறு ஆண்டுகள் ஆகலாம்.
—முதலமைச்சர் கருணாநிதி.

0 அப்படியானால் 'சாதிகள் ஒழிவதை, இன்னும் நூறு ஆண்டுகளுக்கு நாங்கள் விரும்பவில்லை,' என்று சொல்லுங்கள்!

0 சாதிகள் அடிப்படையிலன்றிப் பொருளடிப்படையிலேயே மக்களுக்குக் கல்விச் சலுகைகளும் பிற சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்.
—நாகர்கோவில் தெய்வீகப் பேரவை மாநாட்டில் தீர்மானம்.

0 முதலில் தெய்வீகப் பேரவை மதத்துறையில் சாதிகளையொழிக்கட்டும், ஏனெனில் அங்குத்தான் அது வேர் ஊன்றியிருக்கிறது!

0 சென்னையில் மீண்டும் தலை தூக்கும் 'கள்ளச்' சாராய வணிகம்!
—செய்தி.

0 இந்தியாவில் எதில்தான் 'நல்ல' வாணிகம் நடக்கிறது ..?

0 சாலைகளில் திரியும் 'கால்நடைகளை'ப் பிடித்துக் காவல்பட்டிகளில் அடைக்க சென்னை மாநகராட்சி சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.
—செய்தி.

0 சாலைகளில் வெறுமனே சுற்றித் 'திரியும்' இளங் 'காளை'களும் இதில் அடங்குவார்களா?

0 'A' சான்றிதழ்த் திரைப் படங்களைத் தடை செய்யவேண்டும்.
—ஏ. எல். சீனிவாசன், வேண்டுகோள்.

0 இவ்வகையில் ஏ. எல். சீனிவாசன் தம் தம்பி கண்ணதாசனின் அருவருப்புப் பாடல்களை முதலில் தடை செய்யட்டும்!

# நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

---

பாட்டு ௧௭.

எந்தையு மன்னையு மெதிர்வறி கிலரே !
நந்திறம் பேணிய நண்பரு மறியார் ;
ஏமுற மணந்த ஞான்றை யல்லது
வன்பால் வகுத்த அன்புறு வாழ்வை
யாமும் அறிகிலம் யாங்கிதன் வலியே !

பொழிப்பு :

எம் தந்தையும் தாயும் எதிர்ப்படும் இந் நிகழ்ச்சியை முன் கூட்டியே அறிகிலர். எங்கள் அன்பு நலன்களை விரும்பிப் பாராட்டிய நட்பினோரும் இதனை அறியமாட்டார். பெருமிதத்தோடு நாங்கள் மணந்துகொண்ட அந்தப் பொழுதிலன்றி, வலிய இயற்கை வகுத்துக் கொடுத்த அன்பு நிறைந்த இந்த வாழ்வமைப்பை, நாங்களும் அறியாதிருந்தோம்; என்னே இதன் வலிவு !

விரிப்பு :

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவியைத் தலைவன் மணந்துகொண்ட அணிமைக் காலத்துத் தன் தலைவிக்கும் தனக்கும் உள்ள காதலன்பின் பெருமையை நினைந்து மகிழுமாறு, அவள் தோழியிடத்துக் கூறியதாகும் இக் கூற்று.

எந்தையும் அன்னையும்– என்று தந்தையை முன்வைத்துக் கூறியது, தனக்கு மணஞ் செய்விக்கத் தன் தந்தைக்குள்ள கடமையினை உணர்த்துவான் வேண்டி என்க. தன்னை அன்புடன் பெற்று வளர்த்த பெற்றோரும் அறியா வண்ணம் தான் தலைவியை மணஞ் செய்து கொள்ளுமாறு தூண்டிய இயற்கையன்பின் வலிமையை உணர்த்தினான் என்க.

எதிர்வு அறிகிலர் : எதிர்ப்பட்ட மண நிகழ்ச்சியை அறிவதற்கில்லர்.

நந்திறம் பேணிய நண்பரும் அறியார் : நம் அன்பு நலன்களைப் பாராட்டிப் பேணிய நண்பர்களும் இந்நிகழ்ச்சியை முன் கூட்டியே அறிதற்கில்லார்.

ஏமுற : பெருமை உறும்படி.

மணந்த ஞான்றை யல்லது : மணந்த அப்பொழுதைத் தவிர அல்லாமல்.

வன்பால் வகுத்த அன்புறு வாழ்வை: வலிய ஊழாகிய இயற்கை இன்னார்க்கு இன்னவர் என்று வகுத்துக் கொடுத்த, அன்பு மேவிய வாழ்க்கையை.

யாமும் அறிகிலம் : மணந்து கொள்ளப் புகுந்த யாங்களும் கூட அறிந்திலம்.

யாங்கிதன் வலியே ! : இதன் வலிமைதான் என்னே !

தங்களின் பெற்றோரும் நண்பரும் தாமும் கூட உறுதியாய், இங்கண் நிகழும் என்று அறியாவிடத்து, தானே வந்து எம்மை மணவினைக்கு உடன்படுத்திய இவ் வியற்கைப் பிணைப்பின் வலிமை தான் என்னே என்று தலைவன், தலைவியை முன்வைத்துத் தோழியிடத்துக் கூறினான் என்க.

இது, முல்லைத் திணையும், கற்புக் காலத்துத் தலைவன் தலைவிமுன் மகிழ்ந்து சொல்லியது என்னும் துறையும் ஆகும்.

---

## செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர்கள் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறி முறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளியிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்துத் தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் 'தென்மொழி' சென்னை-5 என்னும் முகவரிக்கு விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—74
சென்னை-5.

பெருஞ்சித்திரன்,
அமைப்பாளர்.

# பிசிராந்தையாரும் பைரனும்
# (PISIRANDHAIAR AND LORD BYRON)

புலவர். சி. இராமசாமி, க. மு.

வையகம் தோன்றிய நாள் முதலா எண்ணற்றோர் பிறந்து மடிந்துள்ளனர். ஆயின் செயற்கரிய அருஞ்செயல் புரிந்தோர், கருத்துக் கருவூலங்களைக் கணக்கின்றிக் குவித்தோர், சமுதாயச் சீர்திருத்தங்கள் செய்தோர் ஆகியோரின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக்கூடியவையே. செல்வர் ஈட்டிய பொருள் அவர் வழியினர்க்கே பயன்படுவதாயிற்று. பேரரசர்கள் கண்ட பெருவாழ்வு நாளடைவில் அழிவதாயிற்று. ஆயின் வறுமையினை உரிமையாக் கொண்ட புலவர்கள் வடித்துக் கொடுத்த பாவமிழ்தம் அனைவர்க்கும் உரிமையுடையதாயிற்று.

வாய்ந்த காலம், பிறந்த பொன்னாடு, உயிரினும் உயர்வான மொழி, போற்றியொழுகிய பண்பாடு போன்றவை பல்வேறு திறப்பட்டனவாயினும் புலவர்கள் எண்ணிய எண்ணங்கள் – கொண்ட கருத்துகள் ஒன்றுபடுதலைக் காணுங்கால் நம்முள்ளமும் வியப்பால் விம்முகின்றது. உயர்ந்தோர் ஒன்றினையே உன்னுவர் (Greatmen think alike) என்ற மொழி எத்துணை உண்மையென நாமும் நம்பக் காரணமாகின்றது.

கழகக் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களில் பிசிராந்தையார் என்பாரும் ஒருவர். ஆண்டுகள் பல கடந்தும் நரை காணாதவர். இக்காலத்து அகவை முதிர்ந்த சிலர் நரைக்குக் கருஞ்சாயம் பூசிக்கொள்ளும் இயல்புடையோரைக் காணும் நமக்கு வியப்பிருக்காது. அக்காலத்து வியப்புடன் வினவியவர்க்குப் பிசிராந்தையார்,

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழுமூரே"

(….புறம் ௧௯௧.)

என விடையளிக்கின்றார். அகவை முதிர்வின் காரணமாக நரை தோன்றல் இயல்பெனக் கருதுவோர்க்கு இக்கூற்று புதுமையாகக் கூடவிருக்கும். துன்பஞ் சூழாவிடின் உடலும் உள்ளமுஞ் சோர்வடையா. உடற் கூறுகள் இளமைத் தன்மை மாறாதிருப்பின் பல்

லாண்டு பிணியின்றி வாழலாம் என இற்றைக்கால அறிவியலறிஞர் கூறும் கூற்றுகளே தக்க சான்றாம்.

அன்பால் பின்னிப் பிணைக்கப்பட்ட வீடு, எண்ணத்தைக் குறிப்பாலுணர்ந்தே செயலாற்றும் இளையோர், சான்றோர் நிரம்பி வழியும் குழகாயம், மன்னுயிரைத் தன்னுயிரென ஓம்பும் மாட்சிமையுடைய மன்னன் ஆகியோரைக் கொண்டதனால் கவலையின்றி வாழ்ந்து, அதன் வாயிலாக நரை தோன்றவில்லையெனக் கூறும் கூற்றைக் கேட்கின்றோம்.

இஃதொத்த கருத்தினையே சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மேலைநாட்டுப் பாவலர் பைரன் (Lord Byron) என்பாரும் தம்முடைய 'சில்லான் சிறையாளி'' (Prisoner of Chillon) என்னும் கதை பொதி சிறு பாவியத்தில், பாவியத்தலைவன் பிரான்காயிசு-டி-பொனிவார்டு (Francois de Boniward) என்பானின் கூற்றாக,

''My hair is grey, but not with years
Nor grew it white
In a single night
As men's have grown from sudden fears
My limbs are bow'd though not with toil
But rusted with a vile repose''

(I—1-6 lines)

எனத் தனக்கு நரையும், உடல் வளைவும், இளமையில் மூப்புத்தன்மையும் தோன்றியமைக்குக் காரணம், தன் கதையைக் கேட்போர், கண்கள் குளமாகத் தான்பட்ட கவலைமிகு வாழ்வேயெனச் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழ்ப் புலவர் மரபுப்படி பிசிராந்தையார் தமக்கு ஆண்டு பலவாகியும் நரை தோன்றாமைக்குக் காரணம் கவலையற்ற வாழ்வேயென இன்பவியலாகக் கூற, ஆங்கிலப் புலவர் மரபுப்படி 'பைரன்' தம் பாவியத் தலைவனுக்கு இளமையில் நரை தோன்றியமைக்குக் காரணம் துன்பஞ் சூழ்ந்த வாழ்வேயெனத் துன்பவியலாகக் கூறுதலில் கருத்தொற்றுமை காண்கின்றோம்.

இங்ஙனமாக மொழியால் வேறுபடினும் புலவர் பெருமக்கள் எண்ணங்களால் — உயர் கருத்துகளால் ஒன்றிடுவரென்பது பாவுணர்வுடையோர்க்குப் பெரு விருந்துதானே......! O

# உடலியல்

## நடப்பது நல்லது.

எவ்வகையான ஆர்ப்பாட்டமுமின்றி, எளிய முறையில் உடற் பயிற்சியை மேற்கொள்ளுவதற்குச் சிறந்த வழி எது தெரியுமா? நடத்தல்....!

இக்கால நாகரிக நகரில், நம் உடலுழைப்புப் பெரிதும் குறைந்து விடுகிறது என்பதை அனைவரும் அறிவர். நடப்பது என்பது பொதுவானதுதானே என்று பலரும் எண்ணலாம். ஆனால் நடக்கும்பொழுது நம் உடல் தசைகள், தசை நாணகள், மூட்டுகள் ஆகிய அனைத்தும் இயங்குகின்றன. மெதுவாகவேனும், சிறிது தொலைவு நடந்து செல்வது நெஞ்சாங் குலையைத் தூண்டுகின்றது. அதனை வேகமாகத் துடிக்குமாறு செய்வதன் மூலம், தசைகளின் தேவைகளுக்கேற்ப, அது தன்னைத் தக அமைத்துக் கொள்வது இயல்கிறது. அதன் பயனாக, நெஞ்சாங்குலையும், அரத்த ஓட்ட மண்டிலமுமே சீர்ப்படுத்தப் பெறுகின்றன.

நடப்பது நுரையீரலுக்கும் நன்மை பயப்பதாகும். இயங்கும் தசைகளுக்கு அதிக உயிர்வளி தேவை. தசைகள் இயங்கும்பொழுது நமது காற்றுயிர்ப்பு அதற்கேற்பச் சீர்ப்படுகிறது. நாம் ஓய்வுற்றிருக்கும்பொழுது, நமது நுரையீரல்களில் ஒரு நிமையத்திற்கு 6 அல்லது 8 பதனம் (லிட்டர்) காற்றுதான் சென்று வெளியேறுகிறது. ஆனால், மிக மெதுவாகவேனும் நாம் நடந்து செல்லும் போது நுரையீரலின் திறன் இரு மடங்கு அதிகமாகிறது. நடப்பது நரம்புகளுக்கும் நல்லது. நமது உள்ளத்திற்கு அது மகிழ்ச்சியைத் தருகின்றது என்பதோடு, உள்ளப் பதற்ற நிலையையும் அது தணிப்பதற்குப் பயன்படுகின்றது.

நல்ல உடல் நலமுள்ள ஒருவர் இயல்பாக நாளொன்றுக்கு 8 அல்லது 10 அயிர மாத்திரி (5 அல்லது $5\frac{1}{4}$ கற்கள்) தொலைவு நடக்கவேண்டும். எனினும் முதலில் குறைந்த தொலைவு நடக்கத் தொடங்கி, படிப்படியாகத் தொலைவை மிகுத்துக்கொண்டு செல்லலாம். நடக்கும் தொலைவை மட்டுமன்றி, நடக்கும் வேகத்தையும் அதிகரிப்பது நல்லது. நாட்கள் செல்லச் செல்ல நீங்கள் நடக்கும் பாதை ஒரே சீரானதாக இல்லாமல், ஏற்றமும் இறக்கமும் இருக்கு

மாறு அமைத்துக் கொள்வது நல்லது. நீங்கள் நடக்கும்போது உங்களது இயககத்திற்குத் தடையாக இருக்குமாறு ஆடை அணியாதீர்கள். கூனிக் கொண்டோ, தலையைக் குனிந்து கொண்டோ நடக்க வேண்டாம். உங்களது நடை ஒரே சீரானதாகவும், தடையின்றியும் இருக்கவேண்டும். இரண்டு மூன்று அடிகள் வைக்கும் போது மூச்சை உள்ளிழுத்துப் பின்னர் அடுத்த இரண்டு, மூன்று அடிகளில் மூச்சை வெளியே விடவேண்டும். ஆனால் உணர்வு முழுமையாக, நீங்கள் எத்தனை அடி எடுத்து வைக்கிறீர்கள் என்பதை எண்ணிக்கொண்டு, மூச்சு விடுவது நல்லதன்று. இயற்கையாகவே அவ்வாறு சீரான மூச்சுயிர்ப்பை நீங்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

நடத்தலுக்கு, காலை நேரம்தான் சிறந்தது. நடத்தலுக்கென்று நீங்கள் தனியாக நேரத்தை ஒதுக்க முடியவில்லையென்றாலும் கூட வேலைக்குச் செல்லும் தொலைவில், ஒரு பகுதியையேனும், கால்நடையாகவே நடந்து செல்லுங்கள். வீடு திரும்பும்போதும் மாடிப்படிகள் இருந்தால், அதை உபயோகியுங்கள். மின் தூக்கி (Lift) க்காகக் காததிருக்க வேண்டாம். மாடிப் படிகளில் ஏறுவது இருதயததிற்கும் தசைகளுக்கும் மிகச் சிறந்ததாகும்.

முழு வளர்ச்சியடைந்த ஒரு மாந்தனின் நெஞ்சாங்குலை நிமையத்திற்கு 60-75 முறை துடிக்கிறது. நடக்கும்போது, அது ஏறத்தாழ 15-20 விழுக்காடு அதிகரிக்கிறது; மூச்சுயிர்ப்போ நிமையத்திற்கு 40 கூடுகிறது; இயல்பாக ஓய்வுற்றிருக்கும்போது அது நிமையத்திற்கு 10-16 தானிருக்கும். இந்த விழுக்காட்டைவிட, உங்களது நெஞ்சத்துடிப்பும், மூச்சுயிர்ப்பு அளவும் மாறுபட்டதென்றால், நீங்கள் மருத்துவர் ஒருவரைக் கலந்து அவர் கருத்தைக் கேட்பது நல்லது. உங்களது நடை முடிந்த பின்னர், களைப்புத் தோன்றினால், அது நல்ல உடற்பயிற்சிக்கு அடையாளமாகும். சிறிது வியர்த்தலும் எளிதான உயிர்ப்பும், மன ஊக்கமும் நீங்கள் நடந்த தொலைவைப் போல இரு மடங்கு நடந்திருக்கலாம் என்ற எண்ணமும் உங்களுக்குத் தோன்றினால், அதுவே உங்களது நடை பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதன் பொருள் ஆகும்.

நீங்கள் இதுகாறும் நடந்து பழகவில்லையெனில், முதலில் கோடை காலத்தில் அந்தப் பழக்கத்தைத் தொடங்குவது நல்லது. நடக்கும் பழக்கம் உங்களுக்கு ஏற்பட்டு விட்டதென்றால், பின்னர் மழை, பனி எதுவும் உங்களை நிறுத்த முடியாது. நாள்தோறும் விடாமல் நடப்பதுதான் சிறந்த பலனையளிக்கும். பெரிதும் களைப்படையாமல் பொதுவாகப் பத்து அயிர மாத்திரி வரை நடந்து பழகுவதற்கு உங்களுக்குச் சில மாதங்கள் பிடிக்கலாம். ஆனால் தாழ்வில்லை. நீங்கள் உடல் நலமாக, நீண்டகாலம் வாழ்வதற்குச் சில மாதங்கள் கூடவா காத்திருக்கக் கூடாது!

—பேரா. ஐ. யாபுலோனேவ்சுகி.

# அறிவியல் நெறிமுறை வரையறைகள் - பூதநூல்.

இல. க. இரத்தினவேல்,
பூதவியல் துறை; பெரியார் கல்லூரி, திருச்சி-20.

## 2. பகுதி 2. வேலை, திறன், ஆற்றல்.

1. வேலை (Work); *விசை செயற்படும் புள்ளி நகர்ந்தால் விசையால் வேலை செய்யப்படுகிறது எனப்படும். வேலையின் அளவு, விசையுடன் விசைத்திசையில் ஆன இடப்பெயர்ச்சியைப் பெருக்கிடக் கிடைக்கும்.*

விசைசெயற் படும்புள்ளி நகர்ந்தால் விசையால்
வேலை செய்யப் படுகிற தெனப்படும்.
வேலையின் அளவு, விசையுடன விசைத்திசையில்
ஆன இடப் பெயர்ச்சியைப் பெருக்கிடக் கிடைக்கும்.

2. வேலையின் அலகு சௌல் (Jowel : *ஒரு நியூட்டன் விசையால் விசைத் திசையில் ஒரு (மீட்டர்) நகர்த்தும் பணி செய்தல் ஒரு சௌல். ( ஆற்றலின் அலகும் இஃதே)*

ஒருநியூட் டன்விசை யால்விசைத் திசையில்
ஒருமீட்டர் நகர்த்தும் பணிசெய்தல் ஒருசௌல்

3. திறன் (Power): *வேலை செய்யப்படும் மேனி திறன்* (power is the rate at which work is done). *அஃதாவது, திறன் எனப்படுவது ஒரு நொடி(யில் செய்யப்படும்) வேலை.*

வேலைசெய் யப்படும் மேனி திறனே
*அஃதாவது,*
திறன்எனப் படுவது ஒருநொடி† வேலை

4. திறனின் அலகு வாட் (watt) :
ஒருநொடியில ஒருசௌல் பணிசெய்தல் ஒருவாட்

5. ஆற்றல்(energy): *ஒருபொருளால் எவ்வளவு வேலைசெய்ய இயலுமோ அந்த அளவு ஆற்றல் எனப்படும். அபபொருள் செய்யும் மொத்த வேலையின் அளவால் ஆற்றல் அளந்தறியப்பெறும்,*

ஒருபொரு ளால்எவ் வளவு வேலை
செய்ய இயலுமோ அவ்வளவு ஆற்றல்;
அப்பொருள் செய்யும் மொத்த வேலையின்
அளவால் ஆற்றல் அளந்தறி யப்பெறும்.

6. இயக்க ஆற்றலும், நிலைப்பு ஆற்றலும் : *ஒரு பொருள் தனது இயக்கத்தால் பெறுவது இயக்க ஆற்றல்* (Kinetic energy)

† நொடி (second): *தமிழ்க்கொலை புரிவதே நொடிக் கடனாகக் கொண்ட வானொலியினர்கூட வினாடியை விடுத்து நொடியில் தொடர்ந்தனர். ஆனால் நமக்கோ வினாடியில்தான் நிறை பொருள் வருகிறதாம் !*

இயக்கம் இன்றி, தன் இருப்பால் உறுவது நிலைப்பு ஆற்றல் (potential energy)

ஒருபொருள் தனதியக் கத்தால் பெறுவது
இயக்க ஆற்றல்; இயக்கம் இன்றித்தன்
இருப்பால் உறுவது நிலைப்பு ஆற்றல்

7. ஆற்றலின் அழிவின்மை நெறி (law of conservation of momentum)

ஆற்றலை ஆக்கவோ அழிக்கவோ இயலாது.
ஒருவகை யாய்உள்ள ஆற்றலை இழப்பின்றி
மறுவகை யாக மாற்றத்தான் இயலும்,

8. வட்டச் சார்பு இயக்கம் (circular motion)

வட்டப் பரிதிப் பாதையில் இயங்கும்
துகளின் இயக்கம் வட்டச்சார் பியக்கம்'

9. சீரியை இயக்கம் (Simple harmonic motion:) இயங்கும் துகளின் முடுக்கம், 1. இயக்கப் பாதையின் வழியில் 2. அப் பாதையில் நிலைத்த ஒரு புள்ளியை நோக்கியும் 3. குறித்த அப் புள்ளி—துகள் இடைத் தொலைவுக்குத் தக்கவாறு மாறியும் இருப்பின் சீரியை இயக்கம்.

இயங்கும் துகளின் முடுக்கம் இயக்கப்
பாதையின் வழியில்அப் பாதையில் நிலைத்தஓர்
புள்ளியை நோக்கியும் குறித்தஅப் புள்ளி
—துகள் இடைத் தொலைவுக்குத் தக்க வாறு
மாறியும் இருப்பின் சீரியை இயக்கம்

10. தனி ஊசல் நெறிகள் : வீச்சு சிறிதாய் இருக்கும் வேளையில் தனிஊசலின் அலைவு நேரம்,

1. வீச்சைப் பொறுத்ததன்று;
2. குண்டுப் பொருள், நிறை, தன்மை வடிவையும் பொறுத்த தன்று;
3. நீளத்தின் இருபடி மூலத்துக்கு (square root) நேர்த் தக வுடையது;
4. ஈர்ப்பு முடுக்க இருபடி மூலத்துக்கு எதிர்த்தகவுடையது

வீச்சு சிறிதாய் இருக்கும் வேளையில்
தனியூசலி னலைவு நேரம், வீச்சைப்
பொறுத்த தன்று; குண்டுப் பொருள்,நிறை
தன்மை வடிவையும் பொறுத்த தன்று ;
நீளத்தின் இருபடி மூலத் துக்கு
நேர்த்தக வுடையது; ஈர்ப்பு முடுக்க
இருபடி மூலத்துக்கு எதிர்த்தகவு உடையது.

11. நொடி ஊசல் (seconds pendulam) என்பது ஓர் அலைவுக்கு இரு நொடிகள் எடுக்கும் ஊசல் ஆகும்.

நொடிஊசல் என்பது ஓர்அலை வுக்கே
இருநொடி எடுக்கும் ஊசல் ஆகும்.

[தொடரும்.]

# மக்களவை

## ம : 203 : ஆங்கிலக் குறியீடுகளுக்குத் தமிழில் என்ன ?

பேரன்புடையீர், வணக்கம். "தென்மொழி" இதழில் எனது கடிதத்தினையும், (ம : 200) தங்களின் மேலான விடையையும் கண்டு மிகவும் வருந்தலானேன். என்னுடைய மொழி நடை தங்களின் சினத்தைக்கிளறக் கரணியமாக அமைந்திருக்குமோ என ஐயுறுகிறேன். தமிழில் தூய்மை வேண்டுமெனக்கருதியே எனது ஐயத்தினைத் தங்களிடம் கேட்டேன். தனித் தமிழ்ச்சொற்கள் வேண்டுமாயின் வேறு யாரிடம் செல்ல இயலும் ?

இன்னோர் ஐயம். etc......என்று ஆங்கிலத்தில் அடிக்கடி பயன்படும் சுருக்குச் சொல்லிற்கு என்ன போடலாம். இன்ன பிற என்பது இணையாக இருக்குமா ? இன்னும் சுருக்கமாக இபிற...... என்று போடலாமா ? என்று கூறிட வேண்டுகிறேன். அத்துடன் கீழே உள்ள கோடுகளை எவ்வாறு அழைக்கலாம் ?

1. ———————— (Solid line).
2. — — — — (Dash line)
3. ................ (Dotted line).
4. .—.—.—.—. (Dash cum Dot line).
5. ∼∼∼∼∼∼∼∼∼∼
6. ∼∼.∼∼.∼∼.∼∼.
7. • (Dot) புள்ளி.
8. - (hyphen, — dash).
9. / (Stroke).
10. (Hatch). =
11. வட்டம் நிலையாகச் சுற்றுவதற்கு என்ன பெயர்? ( (எ-டு.) வண்டிச் சக்கரச்சுழற்சி.)
12. வட்டம் படுக்கையாகச் சுற்றுவதற்கு என்ன பெயர்? ( (எ-டு.) மட்பாண்டச் சக்கரச்சுழற்சி.)

எழுத்துச் சீர்மைபற்றிக் கருதுவது தவறன்று. இந்தியாவிலேயே மற்ற மொழிக்காரர்கள் எண்ணி முன்னேறும்போது; நாம் இருந்த இடத்திலேயே இருந்தால், தமிழுக்கு மூத்தமொழி என்ற பெயர் மட்டுந்தான் மிஞ்சும். வருங்காலத் தமிழ்க் குமுகாயம் நம்

மைச் சும்மா விடாது. இலக்கணத்திற்கு ஊறு இல்லாத வகையில், எழுத்துகளில் உருவ அமைப்புப் பற்றி எண்ணுவதில் பிழையில்லை.

நீங்கள் எவ்வளவு கடிந்து கொண்டாலும் மீண்டும் உங்களிடம் தான் வந்து நிற்போம். குழந்தைகள் தத்தம் தாயினிடம் செல்வதே போன்று, நன்றி, வணக்கம்,

—கொடுமுடி. சண்முகம்; ‘கொங்கு’, சென்னை-20.

**ஆசிரியர் குறிப்பு :**

*மொழி நலத்தையும் இன நலத்தையும் குறித்துக் கருத்தறிவிக்கும் பொழுது. சில அழுத்தங்களுக்காக, வன்மையான சில சொற்களைக் கையாளுவது தென்மொழியின் எழுது முறை. அதை வெறுப்பினலோ, சினத்தினலோ கூறுவதாக நினைக்கவேண்டாவெனக் கேட்டுக் கொள்கின்றேன்.*

*அடுத்து, எழுத்துச் சீர்மையைப் பொறுத்து, அது தன்னளவிலேயே நிறைவான கருத்தென்று தருக்கமிட முடியாது. அதில் உணர்ச்சியும் கலந்துள்ளது. உணர்ச்சி கலந்த அறிவுத் திருத்தம் ஒன்றை மேற்கொள்ளும் பொழுது, அதனை அனைவரின் ஒப்புதலுக்காக முன்வைத்துப் பேசலாமே தவிர, பிறர் அனைவரையும் தள்ளிவிட்டுத் தாமே முடிவு கட்டினற் போலப் பேசுவதோ, தம் கருத்தைக் கடைப்பிடிக்க முற்படுவதோ அறிவாகாது. திருத்தத்திற்குத் தேவை ஏற்படும் பொழுது அதனை எடுத்துக் கூறுவது சரிதான், ஆனல் அத் திருத்தம் சரிதானு என்பதை யார் ஒப்புவது? இனி, அவ்வாறு ஒப்பாத முன்பே தாம் மட்டும் அதை நடைமுறைப் படுத்துவது எவ்வளவு அறிவை அவமதிக்கும் செயல் என்பதை எண்ணிப்பார்க்க. ஒவ்வொருவரும் தம்தம் அறிவுக்குப் புலப்படும் வகையில், பொதுவுணர்வாகிய எழுத்திலும் இலக்கணக் கட்டுக் கோப்பிலும், தம்தம் அளவில், ஒவ்வொரு வகைத் திருத்தத்தை மேற்கொள்வோமானல் நிலை என்னுதம்? ஆரியப் பார்ப்பனரான ‘துக்ளக்’ இதழாசிரியர் ‘சோ’ செய்வது இந்த வகையில் எப்படித் தவருகும்? இப்படித் தமிழரே செய்யத் தொடங்கினல் தமிழினத்தின் தற்கொலை முயற்சிக்கு வேறு தூண்டுகோலே வேண்டாம் அன்ருே? இவ்வகையில் இந்தியாவில் மற்ற மொழிக்காரர்கள் எண்ணி முன்னேறுவதாகச் சொல்வதும் பொருத்தம் இல்லை. குறைபாடுடைய மொழி நிலைகளை அவரவர்கள் திருத்திக் கொள்வதால் நாமும் அப்படி நடக்கத்தான் வேண்டும் என்ருே, நம்மொழியும் குறைபாடுடையது என்ருே பொருளாகிவிடாது. தமிழ் மொழி நிலைகளையும் ஒலி நிலைகளையும் முற்றும் உணர்ந்த அறிஞர்களின் கருத்துகளை ஒன்று திரட்டிச் செயல் நிலைக்*

குக் கொண்டு வரவே நாம் முயற்சி செய்தல் வேண்டும். அதில் விரைவு காட்டலாகாது.

தமிழை இற்றை அறிவியல் வளர்ச்சிக்குத் தகுந்த அளவில் உருவாக்கும் முயற்சி அனைவர்க்கும் பொதுவானதே! இதில் கட்சி உணர்ச்சிக்கோ, அரசியல் அழுத்தத்திற்கோ துளியும் இடமிருத்தல் கூடாது. அவ்வாறு சில முயற்சிகள் பிற மொழிகளுக்கு இருப்பதால் தமிழையும் அவ்வாறு கருதிவிடல் வேண்டா. மூக்கறையன் எல்லாரையும் மூக்கறுக்கச் சொன்ன கதையாகப் போய்விடக்கூடாது. பண்டைப் பண்பாடுகள் அனைத்தையும் சிதைத்துக் கொண்டதற்கே ஒன்றும் கவலைப்படாத தமிழ்க் குமுகாயம், எழுத்துச் சீர்திருத்தத்தை நாம் மேற்கொள்ள வில்லை என்பதற்காக மட்டும், பெரிதாகக் குறை கூறிவிடும் என்பதும் தன்னம்பிக்கைக் குறைவான கூற்றே! இனி, முடிவாக, தமிழ் எழுத்துகளைப் பொறுத்த அளவில், ஓரிரண்டு புதுக் குறியீடுகளும், சில பழங்குறித் தவிர்ப்புகளும் தேவையே. அவற்றைக் காலங்கருதி இடத்தால் செய்வோம். அதற்குமுன் முறையான நம் கருத்துகளை அறிஞர்கள் முன் வைப்போம். ஆனால் நமக்கு நாமே கடைப் பிடியாளர்களாக ஆகிவிடக்கூடாது. தமிழ்மொழி இதுபோல் பல முனைப்புகளைப் புறந்தள்ளி யிருக்கின்றது என்பதையும் மறந்து விட வேண்டா.

இறுதியாகத் தாங்கள் கேட்டுள்ள சில குறியீடுகளுக்கான விளக்கங்கள் வருமாறு:

1. etc. என்னும் ஆங்கிலக் குறுக்கம் 'பிற' 'மற்றும்' என்று பொருள்படும் etcetera என்னும் இலத்தீன் சொல்லின் சுருக்கமாகும்.

தமிழில் 'பிற' 'பிறவும்' என்னும் சொல் வழக்குகளே போதும். இதில் எவ்வகைக் குறைபாடும் இல்லை, மனக்குறையைத் தவிர!

(எ-டு.) திரவிட மொழிகள் தெலுங்கும் மலையாளமும் கன்னடமும் துளுவும் பிறவும் ஆகும். (அல்) தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் இன்னபிற திரவிட மொழிகளாம்.

'இன்ன பிற' என்பதை 'இபிற' என்று எழுதத் தேவையில்லை; நம் மொழி முறை வேறு, ஆங்கில மொழி முறை வேறு. மேலும் ஆங்கிலத்தின் கூட்டொலிப்பு முறை தமிழுக்குத் தேவையில்லாத ஒன்று

'Good' என்பதை 'குட்' என்றும், 'Goods' என்பதைக் 'கூட்சு' என்றும் ஆங்கிலத்தில் வேறு வேறு வகையில் பலுக்குகின்றோம்; தமிழில் இக்குழப்ப நிலைகள் இல்லை. ஆங்கில எழுத்துகளைத்,

தெரிந்துகொண்ட ஒருவரால் எந்த ஆங்கிலச் சொல்லையும் சரியாகப் பலுக்கிவிட முடியாது. அதில் உள்ள பெரிய குறைபாடு அது. ஆனால் தமிழில் அவ்வாறன்று. தமிழ் எழுத்துகளைத் தெரிந்துகொண்ட எவரும் தமிழ் மொழியைத் தடையில்லாமல், எவருடைய உதவி யின்றியும் படிக்கலாம். இதுவே தமிழில் உள்ள சிறப்பான ஒலிப்பு முறை. எனவே ஆங்கிலக் கூட்டொலிப்பு முறையில் தமிழ்ச் சொற் களின் சுருக்கத்தை எழுதுதல் கூடாது. எழுதினால் வேறு வேறு புதுப் பொருள்கள் வரும். அறிவியல் படித்த வேக உணர்வுத் தமி ழர்கள் இவ் விளக்கத்தை நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நம் குழந்தை, தோற்றத்தில் வெள்ளைக்காரக் குழந்தைபோல் இல்லை என்பதற்காக, அதன் முகத்தை ஏதோ ஒரு மருந்துகொண்டு வெளுப்பாக்கவும், முடியைச் செம்பட்டையாக்கவும் தேவையில்லை. அவ்வகை அறியாமை நமக்கு இருத்தல் கூடாது. ஆங்கிலத்தைப் பார்த்துத் தமிழை விளங்கிக் கொள்வதால் வரும் குறைபாடு இது.

2. ———— Solid line—நீள் கோடு (அல்) நெடு வரை (அல்) நீள் வரை.

ஆங்கிலத்தில் Solid என்பதற்குத் திண்மம் அல்லது கெட்டி என்றே பொருள். அதை அப்படியே மொழிபெயர்த்தால் கெட்டிக் கோடு அல்லது திண்மக் கோடு என்றே வரும். இது தமிழ் நுண் ணியல் முறைப்படி சரியில்லை. ஆங்கில மொழியில் மட்டுமன்று பிற மொழிகள் பெரும்பாலான வற்றிலும் திண்மத்திற்கும் நுண்மத்திற் கும் மொழி நிலையிலும் பொருள் நிலைகளிலும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இவற்றில் தமிழில் இருப்பதைப்போல் அவ்வளவு பொருத்த முடைமையைக் காணவே முடியாது.

இக்கருத்தை விரிக்கில் மிகவும் பெருகுமாகலின் இத்துடன் நிறுத் திக்கொள்வோம்.

இனி, கோடு என்னும் தமிழ்ச் சொல்லிற்கு 'வளைவு' என்பதே பொருள். (இதற்கும் அறிவியல் முறையில் நிறைய விளக்கம் உண்டு) எனவே நாம் பொதுவாகக் கோடு என்று சொல்வதைவிட 'வரை' என்பதே பொருத்தம் ஆகும். வரை என்பதற்கு இழு என்றும் ஒரு சொல்லுண்டு. 'இழு' என்னும் வேர்ச் சொல்லிலிருந்தே இழுது— எழுது—எழுத்து என்னும் சொற்கள் பிறக்கும். இந்த 'இழு' என் னும் சொல்லே கிரேக்க மொழியிலும் எழுத்தைக் குறிக்கும் வேர்ச் சொல்லாக இருப்பதைக் காண்க. இதனையும் விரித்தால் பெருகுவ தாகும்.

எனவே, கோடு என்பதைவிட வரை என்பதே சரியாகப் பொருந்துவதாகும். ஆனால் 'கோடு' என்னும் சொல் பெருவழக்காகப் போய்விட்டமையின் அதனையும் மேற்கொள்வது பிழையாகாது. இனி, பிற விளக்கங்களைப் பார்ப்போம்.

3. — — — — — —. Dash line. உடை வரை (அல்லது) உடை கோடு.

Dash என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு மோதுதல் என்பதே பொருள் இங்கு ஒவ்வொரு சிறு கோடும் ஒன்றோடொன்று மோது கின்ற நிலையில் உள்ளதால் இதனை Dash line என்றே வழங்குகின் றனர். முழுவதையும் அவ்வாறு வழங்கிய பின் ஒவ்வொறு சிறு துண் டையும் கூட Dash என்றே வழங்கினர். நாம் ஒரு துண்டை (—) உடை குறி என்று கூறலாம். இதனினும் சிறிது குறுகியிருக்கும் ஒரு குறி (-) (HyPhen) இரண்டு சொற்பகுதிகளை இணைக்கப்பயன் படுவதால் அதை-Hyphen-ஐ—இணைகுறி என்று கூறலாம்.

4. ............... Dotted line—புள்ளி வரை (அல்) புள்ளிக் கோடு.

5. —.—.—.—.— Dash cum Dot line உடைப் புள்ளி வரை. (அல்) உடைப்புள்ளிக் கோடு.

6. ~~~~ ~~~~ Wavy line அலை வரை (அல்) அலைகோடு.

7. ~.~ ~.~ Wavy cum Dot line. அலைப்புள்ளி வரை (அல்) அலைப் புள்ளிக்கோடு.

8. / : Stroke — இழுப்பு, வீச்சு.

ஆங்கிலத்தில் Stroke என்பதற்கு அடித்தல் என்றே பொருள். அந்த அடித்தலும் மணி முதலியவற்றை அடித்தலைக் குறிக்கவே வரும். ஆனால் அடித்து 'நீக்கு'வதற்கும் அந்தச் சொல்லையே பயன்படுத்து கின்றனர். இஃது, ஆங்கில மொழியின் சொல் வறுமையையே காட்டும். தமிழ் சொல்வளஞ் சான்ற முழுநிலை மொழியாகலின் உலகின் எந்தச் சிறு செயலையும் காட்டச் சொற்கள் உண்டு. ஆகையால் தமிழில் / இக்குறியை வீச்சுக் குறி என்றும், அழிகுறி என்றும், நீக்கு குறி என்றும் சொல்லலாம்.

9. நிலையாக நிற்கும் வட்ட (வண்டிச் சக்கர)ச் சுழற்சி. } — நிலைச் சுழற்சி (அல்) நிலைச் சுற்று.

10. படுக்கையாக உள்ள வட்ட (மட்பாண்டச் சக்கர]ச் சுழற்சி. } ; கிடைச் சுழற்சி(அல்) கிடைச் சுற்று.

—இனி, இவையல்லாத பல விளக்கங்களைத் தமிழில் கொணர்தல் வேண்டும். அனைத்து முயற்சியும் விளைவும், நம் பற்றார்வத்தையும், அறிவூக்கத்தையும், உண்மையான துணை நலத்தையும் பொறுத்தே முழுமை பெறக்கூடியன என்பதை மட்டும் திட்டமாக உணர்ந்து கொள்க.

—பெருஞ்சித்திரன்.

*சென்ற இதழ்த் தொடர்ச்சி—3.*

# திரவிடரின் தனித்தன்மை புனைவா; உண்மையா?

தமிழாக்கம்:
பி. இராமநாதன், க.இ.ச.இ.
வழக்குரைஞர்.

பர். ஆர். ஈ. ஆசர்,
மொழி நூல் ஆய்வாளர்,
எடின்பரோ பல்கலைக் கழகம்.

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து எழும் மற்றொரு கேள்வி: நாட்டின் பிற பகுதிகளில் காணப்படும் நிலைமையினின்றும் தமிழ் நாட்டின் நிலைமை அடிப்படையில் வேறுபட்டதா என்பதாகும். பல கூறுகளைக் கொண்ட இந்திய ஒருமைப்பாட்டில் வங்காளம், மலையாளம் போன்றவற்றைப்போல, தமிழும் ஒரு பொதுமைக் கூறுடையதுதானா? அன்று, தமிழின் நிலைமை சிறப்புத் தன்மை வாய்ந்தது என்பதே இதற்கு விடையாகும். இந்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள நாட்டினங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது எனக் கொண்டாலும், தமிழின் தனித்தன்மை பிறவற்றினின்றும் சிறந்ததாகும். தமிழ்ப் பண்பாடு தொன்மை வாய்ந்தது. தொடக்கத்தில் அஃது ஆரியப் பண்பாட்டினின்றும் முற்றிலும் தனிப்பட்டதாக இருந்தது. எனவே இந்திய நாகரிகத்தில் பிற மொழிப் பகுதிகளின் பங்கைவிடத் தமிழின் பங்கு மாறுபட்டது. தங்களுடைய தனித்தன்மை பற்றித் தமிழரிடையே உள்ள உணர்வுக்கு நயன்மையுண்டு. தொல் பழங்காலத்தில், திரவிடமொழி பேசும் பகுதிகள் அனைத்தும் ஒரே பண்பாடு உடையவையாய் இருந்தன. இப்பொழுதும் அம்மொழிகளிடையே உள்ள உறவு பரவலாக அனைவருக்கும் தெரிந்துள்ளது. எனவே ஓரளவுக்குத் தமிழுக்குள்ள தனித்தன்மை தென் இந்தியா அனைத்தையும் தழுவியது எனலாம். (முற்றும்.)

---

அடிப்படைக் குறிப்புகள்: [ஆசர் தந்தவை] மேலே கூறியவற்றுக்கு ஆதரவானவையும் மறுப்பானவையுமான பல அடிப்படைகளையும் தந்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் இத்துறை பற்றிய நூல்கள் முதலியவற்றைப்பற்றி ஒரு சிறு விளக்கம் தருகிறேன்:

இப்பொருள் குறித்த இந்திய அரசு வெளியீடுகள் "Report of the States Reorganisation Commission", புதுதில்லி. 1955;

மற்றும் "Report of the Offical Languages Commission" புது தில்லி, 1956. பல மொழி பேசும் நாடுகளில் ஒரு மொழியை ஆட்சி மொழியாக வைக்கும் சிக்கல்பற்றி — R. B. Le Page என்பவர் எழுதியுள்ள "The National Language question : Linguistic problems of newly independent states" (ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அச்சகம், 1964) என்னும் நூலைக் காண்க.

திரவிட இயக்கத்தின் பின்னணிபற்றி Eugene F. Irschick என்பவர் "Politcs and Social Conflict in South India: The Non Brahman Movement and Tamil separatism; 1916—1929." (கலிபோர்னிய பல்கலைக் கழக அச்சகம், 1969) என்னும் நூலில் பார்க்கலாம். அது நுண்மையான கருத்தோட்டம் உள்ளது; ஆழ்ந்த் ஆராய்ச்சிக்குப் பின் எழுதியது. Robert L. Hardgrave எழுதிய 'The Dravidian Movement (பாப்புலர் பிரகாசன், பம்பாய் 1965) என்னும் நூலையும் பார்க்கலாம். Selig S. Harrison எழுதிய "India, The Most dangerous decades" (பிரின்சுடன் பல்கலைக் கழக அச்சகம், 1960) எனனும் நூலிலும் ஒரு பகுதி இப்பொருளைப் பற்றியது.

இந்தியப் பண்பாட்டில் திரவிடத் தென்னிந்தியாவின் பங்கு பற்றி இக் கட்டுரையில் குறிப்பிட்ட Slater எழுதிய நூலும் வேறு பல நூல்களும் கூறுகின்றன. எசு. கிருட்டிணசாமி (ஐயங்கார்) எழுதிய Some contributions of South India to Indian culture (கல்கததா பல்கலைக் கழகம், 1923) என்னும் நூலில் உள்ள ஆரியச் சார்பான, ஆரியப் பார்ப்பனச் சார்பான சுருத்துகள் ஏற்கத்தக்கவை யல்ல வெனினும் அதுவும் படிக்கத் தக்கதே. அந்நூலின் ஒருபால் கோடிய கருத்துகளும் சில புலனங்களை நமக்குக் கோடிட்டுக் காட்டத்தக்கவை. வட இந்திய, தென்னிந்திய உறவுபற்றி வரலாற்று அடிப்படையில் அமைந்த நேர்மையான விளக்கம் சென்னைப் பல்கலைக் சழகத்தில் A. L. Baoham நிகழ்த்திய உரை ஒன்றில் உள்ளது. அண்மையில் அவ்வுரை Studies in Indian History and Culture (Samoddhi Publications, Calcutta) என்னும் நூலின 20-29 பக்கங்களில் அச்சிடப்பட்டு உள்ளது!

1969 ஆம் ஆண்டு கோபனேகன் நகரில் Seondinavian Institute of Asian Studies எனனும் அமைப்பைச் சார்ந்த Asko Parpola, Seppo Koskiemniemi Simo Par pola, Penti Aalto ஆகியோர் "Decipherwent of the Proto-Dravidian inscrptions

of the Indus Civilisation என்று ஒன்றும் "Progress in the decipherment of the Proto Drairdian Indus script என்று ஒன்றுமஆக இருசிறு நூல்களை வெளியிட்டுள்ளனர். அவற்றில் சிந்துவெளி நாகரிக எழுத்துகள் திரவிட மொழியின் தொல் வடிவைச் சார்ந்தவை என்ற கருத்து வெளியிடப் பட்டுள்ளது. Journal of Tamil Studies (சென்னை) என்னும் தாளிகை இரண்டாம் மடலம் முதல் இதழ் (1970. மே) முழுவதும் இப் பொருள் பற்றிய கட்டுரைகளைக் கொண்டது. இசகாண்டிநேவிய ஆராய்ச்சியாளர் கட்டுரைகள் அவைபற்றிப் பிற அறிஞர் கருத்துரைகள், இத்துறையில் முயன்றுவரும் சில உருசிய ஆராய்ச்சியாளர் கட்டுரைகள் போன்றவற்றையெல்லாம் அவ்விதழில் ஒருங்கே காணலாம்.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் முதலில் 1856 ஆம் ஆண்டு இலண்டனில் வெளியிடப்பட்டது. 1875 ஆம் ஆண்டில் வெளிவந்த இரண்டாம் பதிப்பைக் கால்டுவெல்லே திருத்திய பதிப்பாகி வெளியிட்டார். மூன்றும் பதிப்பை 1956இல் சென்னையில் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அதில் திரவிட மொழிகளில் உள்ள இலக்கியம் பற்றிக் கால்டுவெல் எழுதிய பகுதி நீக்கப்பட்டுள்ளது. காரணம் (கால்டுவெல் காலத்தில் திரவிட மொழி, இலக்கியம் பற்றி முழுமையாகத் தெரியாத நிலை இருந்ததால்)அப்பகுதி மன நிறைவளிக்கத் தக்கதன்று என்பதே யாகும். சேவியர். எசு. தனிநாயகம் பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்ட Tamil Studies Abroad (அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கழக வெளியீடு, கோலாலம்பூர். 1968) எனனும நூலின் 43-80 பக்கங்களில் ஆர். ஈ. ஆசர் எழுதிய "பிரித்தானிய அறிஞர்களின் தமிழாராய்ச்சிகளும், பிரித்தனில் தமிழ் பற்றிய படிப்புகளும்" என்னும கட்டுரை உள்ளது. அதில் தமிழ்மொழி, இலக்கியம்பற்றி மேனாட்டினர் ஆர்வத்துடன் வெளியிட்ட கருத்துகளின் தன்மைபற்றி விளக்கப்பட்டுள்ளது

இதுவரை (1972) தமிழ் ஆராய்ச்சிக்காக மூன்று அனைத்து நாட்டு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. கோலாலம்பூரில் 1966 இலும், சென்னையில் 1968 இலும், பாரிசில் 1970 இலும அம்மாநாடுகள் நடைபெற்றன.* முதல் மாநாட்டு நடவடிக்கைகளைக் கொண்ட இரண்டு மடலங்கள் சேவியர். எசு. தனிநாயகத்தைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கோலாலம்பூரில் 1968 இல் ஒன்றும், 1969 இல் ஒன்றுமாக வெளிவந்துள்ளன. இரண்டாவது மாநாட்டு நடவடிக்கைகள் மூன்று பெரு மடலங்களில் (இரண்டுக்கு ஆசரும், ஒன்றுக்கு வி. ஐ. சுப்பிரமணியமும் பதிப்பாசிரியராவர்) 1971 ஆம ஆண்டு சென்னையில் வெளிவந்தன. O

---

* *இந்தக் கட்டுரை எழுதப்பெற்றபொழுது இலங்கையில் நடந்த நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறவில்லை.*

# திரு வி. க. வாழ்வில் பெரும்பங்கு கொண்டது மொழித்தொண்டா, பொதுத்தொண்டா?

— பெருஞ்சித்திரன் —

(தி. பி. 2004 நளி, 17, (2—12—73)-ஆம் பக்கல், திருவாரூர் திரு. வி. க. சிலை திறப்பு விழாவில், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், தமிழக முதலமைச்சர் மு. அருட்செல்வர், குன்றக்குடியடிகளார், பா வோ கி. சுத்தானந்த பாரதியார் முதலியோர் முன்னிலையில் நடந்த பாப்பட்டி மன்றத்தில் நடுவரர்க வீற்றிருந்து பாடியது.)

எந்தமிழை எந்தமிழ் நாட்டை அரசாளும்
செந்தமிழ்க் கலைஞ! செந்தமிழ் ஞாயிறீர்!
அடிகளீர்! புலவரீர்! அருமைத் தமிழகம்
விடிவுகொள் நாளில் விளங்கத் தோன்றிய
அன்புறு பெரியீர்! அன்பரீர்! தாயரீர்!
இன்புறு முணர்வால் பாமன் றேறும்
பாவலீர்! உங்கட்குப் பணிவுசால் வணக்கம்.

ஆவலால் பட்டிமன் றணைந்திருக் கின்றீர்!
செந்தமிழ்த் தாயின் சீரடி போற்ற
வந்திருக் கின்றீர் என்னினும் வழுவிலை!
திரு.வி. க.-வின் திருவுரு வாழ்த்த
மருவு காதலால் மண்டினீர் என்னினும்,
சான்றோர் சாதலை வாழ்தலாய் எண்ணும்
ஆன்றோர் வழியை அகலா நெஞ்சராய்
மீட்டும் புதுக்கிக் கொண்டீர் என்னினும்
காட்டுந் தவறோ கடுகள வில்லை!

எவ்வழி யாகவோ தமிழர் இழந்தவை
ஒவ்வொன் றாகப் பெறப்பெற உலகினில்
அவர்முன் னேற்றம், அவர்மொழி, நாடு
துவளுதல் இன்றித் துலங்குதல் உறுதி!

அறிஞரைப் போற்றுதல் அறிவைப் போற்றலே!
அறிவைப் போற்றலே அனைவர்க்கும் கடமை!
கடமை தவறினால் காண்பது மடமையே!
மடமை சூழ்வதோ மாய்வதின் இலக்கணம்!
போற்றுதல் என்பது அன்பால் புரப்பது!
தூற்றுதல் என்பதோ துன்பால் தொடர்வது!

அன்பினுல் ஒருவர் அறிவைப் புகழ்வதோ
இன்பம் பெறுவதும் இன்பந் தருவதும் !
எனவே அறிஞரை ஏற்றப் படுத்திஞேம் !
கனவாய் இருந்ததைக் கல்லாய் நிறுத்திஞேம் !
கல்லென் ருலும் சில்லாய்ப் போமென
வல்ல செம்பொனுல் வடிவம் ஆக்கிஞேம் !

இங்கொரு கருத்தை எதிர்வைக் கின்றேன் :
திங்களும் கோளும் செல்கையில், இங்ஙன்
படிமமும் வடிவமும் பாங்குற நிறுத்தி
அடிதொழல் அறிவா ? அன்பா ?—ஆங்கதால்
எய்துறும் பயஞேர் எள்ளுக் கத்துணை
கொய்திட வருமோ ?—என்ருெரு கொள்கையர்
கேட்டு நிற்கலாம்! இனுஞ்சிலர் கிளர்ச்சியால்
நாட்டு நந்நலம் நாடுவார் போல
உயிரோ டிருக்கையில் ஒருபயன் நல்கார்
உயிரது கழிந்தபின் உருவம் நிறுத்துதல்
என்ஞே ? என்ஞே ?—எனமுழக் கிடுவார் !
இன்னவர்க் கொன்றிங் கியம்பிடல் வேண்டும் !

முதற்கண் திங்களும் கோளும் முழக்கிடும்
எதற்கு,எது, ஏன்—எனும் எதிர்நெறிக் கொள்கையர்
தமக்கொரு கருத்தைச் சாற்றிடு கின்றேன் !
உமக்கெலாம் உண்மை உணர்த்துதல் எம்கடன் !

திங்களும் கோளும் செல்வதும் சிறப்பே !
இங்குள அறிஞரை, ஏத்தலும் சிறப்பே !
முன்னதே அறிவாம் ; பின்னதோ அன்பாம் !
இன்னது இதற்கென இறப்ப அறியாது
என்னது ஏன்என—எடுத்ததற் கெல்லாம்
பன்னிப் பன்னி விஞவையே பன்னுதல்
முன்னிய அறிவென மூண்டு விடாது !
நன்னர் ஆய்ந்தால் நம்க்குஇவ் வுலகில்
நெருப்பும் வேண்டும் ; நீரும் வேண்டும் !
விருப்பமும் வேண்டும் ; வெறுப்பும் வேண்டும் !
நட்பும் வேண்டும் ; பகையும் வேண்டும் !
கட்படு வனசில ; கட்படா தனசில !

நீரைக் காய்ச்சிட நெருப்பே உதவும் !
நெருப்பை அவித்திட நீரே உதவும் !

மெய்யை விரும்பவும் பொய்யை வெறுக்கவும்
நல்லநட் பாடவும் தீயன பகைக்கவும்
வல்ல இருதிறன் வாய்த்தலே நன்றாம்!

எவைஎவை எதற்கென எண்ணாது கொளாது
"அவையவை யெல்லாம் அறிவற் றார்செயல்;
எவைதாம் எனினும் இங்கிருப் பவையெலாம்
கவைக்குத வாதன; கடலோ வானமோ
தாண்டி வருபவே தக்கவை" என்றால்,
ஈண்டிங் கிருப்பவர் யாவரும் மூடரோ?

"வந்தவர் வஞ்சகர் தமிழால் செழித்தார்;
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்;
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்!"

—என்று முழங்கிய புரட்சிப் பாவலர்
நின்று முழக்கிய சொற்களை நினைமின்!

திரு.வி. க.-வெனும் திருமிகு தலைவர்
ஒருதொழிற் புரட்சியை உண்டாக்க வில்லையோ?
உருசிய மண்ணும் சீன மண்ணுந்தாம்
பொருளறி வுற்றவோ? பிறவெலாம் பொக்கோ?

எதற்குச் சொல்கிறேன் — திரு.வி.க. என்போர்
சிதற்கும் பலிலே கட்டைச்செவ் வெறும்பு!
தொழில்,தொழி லாளர் எனின்தோள் புடைத்துப்
பொழிலென உள்ளம் புலர்ந்தெழும் தலைவன்!
இந்தியா முழுவதும் இணைதொழில் இயக்கம்
முந்திக் கண்ட முதுபெரும் புரட்சியோன்!
அவரைப் போற்றுதல் ஆகா தெனின்,வே
றெவரைப் போற்றுதல் ஏற்றதாம் என்பீர்?

அடுத்து,ஒரு கருத்து பொதுவாய் அறைவது!
"எடுத்ததோ எடுத்தீர், இருந்தபோ தெடுத்திரா?
செத்தபின் தானே சிலையெடுக் கின்றீர்!
செத்தபின் தானே சிறப்புச் செய்கிறீர்?"

—என்பதக் கருத்து! இஃது ஏற்ற கருத்துதான்!
மன்பதை நினைதகும் மாசிலாக் கருத்துதான்!
இருப்பினும் இறந்தபின் படிமம் எடுப்பது
விருப்பின் நிகழ்வதாம் வினையும் தூயதாம்!
உயிரோ டிருக்கையில் பாராட்டும் உவகையில்

செயிர்தீர் சான்றோர் ஆயினும் செருக்கினால்,
தன்வினை தளர்ந்து தன்முனைப் பெழுந்து
மன்வினை மறந்து, மற்று,அவர் அறிவே
உயர்ந்தது சிறந்தது ஒருகா லத்தும்
பெயரா நிலைப்பது ; பிறவெலாம் பொய்ப்பது !—

என்று நினைப்பவர் அஃகி இழிசிறார்.
நன்றினும் தீது நண்ணியே இருக்கும் !
எவ்வா றாயினும் இருக்குங் காலை
ஒவ்வா ராயினும் ஒப்பார் போலப்
பொருள்கொடுத் தேனும் புகழ்பெறத் துடிப்பர் !
மருள்தீர் அறிவும் மனமும் அன்றி,
உடல்நசை மிகுப்பால் — உலகியல் விருப்பால்
கெடலுறும் நடுநிலை ! கேடும் செய்வார் !
ஆகவே மறைந்தபின் அறிஞரைப் போற்றுவர் !

சாகவே வேண்டும் எனயாம் சாற்றிலம் !
இருக்குங் காலை அறிவினை ஏற்றுப்
பெருக்க விதைத்திடப் பெய்தலே சாலும் !
புகழ்ச்சி என்பது தேவையில் புனைவே !
இகழ்ச்சி என்பதும் ஏற்றவர் செயலிலை !
ஒருவர்தம் அறிவின் உழைப்பையெல் லாரும்
பெறும்படி செய்வதே போற்றலிற் பெரியது !

மற்று,அவர் வாழ்க்கையில் மலைமலை யாக
வெற்றுப் புகழ்ச்சியை வீணே குவிப்பது
என்ன பயனையும் விளைத்தலிங் கில்லை ;
கன்னலும் செந்நெலும் கழனி தருவதால்
எரு,நீர் இடுவமா ? புகழ்ச்சியை இறைப்பமா ?
திருவுடை யார்க்கெனின் தேவை புகழ்ச்சியே !
அறிஞர் தமக்கெனில் ஆக்கத்திற் குறுதுணை
செறியத் தந்து செறியப் பெறுதலே
சிறந்தது ! ஆதலால் செத்தபின் புகழ்ந்தனர் !
இறந்தபின் புகழ்வதால் இறுமாப்பும் இராது !
புகழ்பெறார் தமக்குப் பொறாமையும் எழாது !
தகவும் அதுதான் ; தகைமையும் அதுதான் !
சொல்லுதல் யாவரும் சொல்லலாம்; சொற்பொருள்
வெல்லுதல் காலத்து விளையும் நிகழ்ச்சியாம் !
ஈங்கிது நிற்க !

—[தொடரும்.]

தொடர்: 7.

## 2. கிழக்காசிய நாடுகளின் நடுநாயக நாடு சிங்கப்பூர்!

**நான்** சிங்கைக்குச் செல்லுமுன்பே அந் நாட்டைப் பற்றிப் பலரிடமும் பலவாறாகவும் கேள்விப் பட்டிருக்கிறேன். அதைப்பற்றிய நூல்களையும் படித்திருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் என் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் சொல்லிமுடியாது. அந்தப் பெருமைமிக்க நாட்டை ஒருநாளைக்குக் காணத்தான் போகின்றோம் என்று உறுதியாக நம்பியிருந்தேன். இனி, அதற்கும் மேலாக, நம் தமிழின மக்கள் இவ்வுலக உருண்டையின் மேல் எங்கெங்கெல்லாம் பரவி வாழ்கின்றார்களோ, அங்கெங்கெல்லாம் போய், அவர்களுக்கு வரலாற்றறிவும், மொழியுணர்வும், இன நெருக்கமும் ஏற்படுத்தி, இப் பழம்பெரும் இனத்தின் இழந்துபோன பெருமையை மீட்க வேண்டும்; அதையும் இந்தப் பிறவிக்குள்ளேயே செய்யவேண்டும் என்ற தணியாத ஆர்வம் கனல்போல் என் உடலுக்குள், உயிருக்குள் அளாவிக் கலந்து மூச்சுயிர்ப்பாக உயிர்த்துக் கொண்டிருந்தது: அந்த எண்ணம் இக்கால் செயல்படத் தொடங்கியிருப்பதாக உணர்ந்தேன். எனவே என் உள்ளம் படபடத்தது; உணர்வு கொப்பளித்துக் கொண்டிருந்தது; அறிவு எரிமலையெனக் கனன்று கொண்டிருந்தது; புலம்பன் (ஆன்மா) சிங்கைவாழ் தமிழர் தம் உயிர்ச் சிதறல்களின் மேலெல்லாம்—அவர்கள் வாழ்கின்ற நகர்ப் பகுதிகள், படுகைப்

பகுதிகள், கப்பல் துறைகள், நிமிர்ந்து வானளாவி நிற்கும் நொய்வ மரப் பகுதிகள்—இங்கெல்லாம் சிறகடித்துப் பறந்து திரிந்து உலா வரத் தொடங்கிவிட்டது.

சிங்கை, இயற்கையிலேயே எழில் மிகுந்த ஒரு நாடு. ஆசியாக் கண்டத்தின் தெற்குக்கோடி மூலையில், அக்கண்டத்தின் நிலப்பகுதி யுடன் ஒட்டியும் ஒட்டாமலும், பொன் தொங்கலில் கோத்த வயிர மணிபோல் விளங்கும் நாடு சிங்கப்பூர். உலக நடுக்கோட்டுக்கு வடக்கே 85 கற்கள் தொலைவில், மலையாத் தீவத்தையடுத்துத் தென் பகுதியில், தென் கிழக்காசியப் பகுதிக்கே நடுநாயகமாய், கவர்ச்சி மிகுந்த கடற்கன்னியாக, செல்வச் செழிப்புள்ள எழில் சுரங்கமாக, கப்பல்களில் போய் வருவோர் தங்கித் தம் களைப்பைப் போக்கிக் கொள்ளும் கடற் பூங்காவாக, அமைந்துள்ள ஒரு சிறிய தீவாகும் இது. இதற்கு வடக்கில் வட மலேசியாவும் அதையடுத்துத் தாய்லாந்தும் பர்மாவும், வடகிழக்கில் பிலிப்பைன்சு தீவுகளும். நேர் கிழக்கில் போர்னியோவும், தென் மலேசியாவும், தென் கிழக்கில் இந்தோனேசியாவும் சாவாவும் பாலித் திவும், தெற்கே தொடங்கித் தென் மேற்கு வரை அளாவிக்கிடக்கும் சுமத்திராவும், வடமேற்கில் அந்தமான், நிகோபார் தீவுகளும் இருக்கின்றன.



சிங்கையே ஒரு சிறிய தீவாக இருந்தாலும், இதைச் சுற்றி இத னினும் மிகச் சிறிய உதிரிகளாக ஐம்பத்து நான்கு தீவுகள் உள்ளன. இவற்றுள் ஏறத்தாழ இருபத்து நான்கு தீவுகள் குறிப்பிடத்தக்க பரப் பளவும் மக்கள் தொகையும் வாய்ந்தவை. அத்தனைத் தீவுகளும், தாய்த் தீவாகிய இந்தச் சிங்கைத் தீவும் சேர்ந்ததுதான், சிங்கப்பூர் என்னும் நாடாகும். இத் தாய்த்தீவும் சேய்த் தீவுகள் அனைத்தும் சேர்ந்த மொத்த பரப்பே 225·6 சதுரக் கற்கள் தாம்! சென்னை நக ரத்தைப்போல் ஏறத்தாழ நாலரை மடங்கே பெரியது! தமிழகத்தில் உள்ள மிகச்சிறிய மாவட்டமாகிய குமரி மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்குப் பரப்புடையதுதான் இந்த நாடு!

இது, தெற்கு வடக்காக 14 கற்கள் அகலமும், கிழக்கு மேற்காக 26 கற்கள் நீளமும் கொண்டது. சிங்கை மட்டும் $209\frac{1}{2}$ சதுரக் கற் களும் அதன் குஞ்சுத் தீவுகளாகிய அந்த ஐம்பத்து நான்கு தீவுகளும் மொத்தமாகச் சேர்ந்து 15 சதுரக் கற்களுமே பரப்பு வாய்ந்தன. அந்தச் சிறிய தீவுகளில் மிகப் பெரியதான பூலோவ் தெக்காங் பெசார் (Pulav Tekong Besar) 4429 குறுக்கம் (ஏகர்) (6-92 சதுரக் கற்கள்) பரப்புடையது. 'பூலோவ்' என்பது மலாய் மொழி யில் தீவு என்றும் 'பெசார்' என்பது 'பெரிய' என்றும் பொருள்படும். தெக்காங் என்பது ஒருவரின் பெயராக இருத்தல் வேண்டும். இதை யடுத்து 'பூலோவ் உபின்', 'பூலோவ் பிளக்காங் மாத்தி', 'பூலோவ் தெக்கங் கெச்சில்' என்பனவெல்லாம் படிப்படியான சிறுசிறு குட்டித் தீவுகள். இவற்றில் பிளக்காங் மாத் தீவு 712 குறுக்கமும், தெக்காங் கெச்சில் தீவு 220 குறுக்கமும் பரப்புடையவை. இத் தீவுக் கூட்டத்துள் ஒரு குறுக்கப் பரப்புடைய தீவுகள் பத்து உள்ளன: வெறும் கடற் பாறைத் தொடராகவே ஏழு தீவுகள் உள்ளன. ஒருசில பவழப் பாறைத் தொடர்கள். இவற்றையெல்லாம் எந்தெந்த அளவில் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அந்தந்த அளவில் சிங்கப்பூர் அரசு பயன்படுத்திக்கொள்ள தவறவில்லை.

கிழக்காசிய நாடுகளின் செய்தித் தொடர்புக்கான நடுப்பகுதி யாகவும், ஏறத்தாழ அறுபது நாடுகளின் நூறு கப்பல் - தட வழிகளை இணைக்கும் துறைமுகமாகவும், உலக வாணிகத்தின் ஒரு குவி முனை யாகவும் நடுவமாகவும் சிங்கப்பூர் விளங்குகின்றது. இந்தியக் கடலை யும் பசிபிக் கடலையும் இணைக்கின்ற, மிக நெருக்கமான கப்பல் போக்குவரத்து வழிகளின் கூடல் (Junction) நாடாக உள்ளது இது. எண்பத்து மூன்று கற்கள் நீளமுள்ள இதன் அழகிய கடற்கரை உலகின் நான்காவது பெரிய கடற் கரையாகும். இதன் துறைமுகம் ஓர் இயற்கைத் துறைமுகம்; தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரி யது; இலண்டன் துறைமுகத்திற் கடுத்தது. ஆழமுடைய கடலோரம் வாய்ந்தது, புயல் காப்பாகவும், கடற் கொள்ளைகளுக்கு வாய்ப்பளிக் காத அமைப்புடையதாகவும் இருப்பதாக இதனைப் புகழ்கின்றார்கள்.

இத்தகைய பெருமையும் புகழும் வாய்ந்த ஒரு நாட்டிற்கு வான் வழியாக வந்திறங்கி, என் தமிழ் மக்களையும் அவர்கள் வாழ்கின்ற வகைகளையும் கண்டு, அவர்களின் உள்ளங்களில் அழுத்திக் கிடக்

கின்ற பழைமை நினைவுகளைப் பெயர்த்து வெளிக்கொணர்ந்து, பழைமைக்கும் பழையவான அம் முதிர்ந்த உணர்வுகளையும், பண்பட்ட நாகரிகப் பண்பாடுகளையும், புதுமைக்கும் புதுமையாகிய இந் நடைமுறையுலகத்தின் புன்மை நாகரிகங்களுடன் ஒப்பிட்டுக்காட்டி, புதிய ஒரு விளைவு காணப் புறப்பட்டிருக்கின்றேன் என்னும் ஒரு பெருமித உணர்வுடன் அந்த இரிட்சு விடுதி'யில் மார்ச்சு 10-ஆம் பக்கல் இரவைக் கழித்தேன்.

மறுநாள் காலையிலிருந்தே அன்பர்கள் அவ் விடுதிக்கு வருவதும் போவதுமாக இருந்தனர். இரவு வந்திருந்த பாவலர் அன்பரசன், வீட்டிலிருந்து எனக்காகச் செய்யச் சொல்லிப் பல இனிப்புப் பண்டங்களைக் கொண்டுவந்து அந்த நடு இரவிலேயே தின்னச் சொல்லி வற்புறுத்திய அன்பை மீண்டும் ஒரு முறை நினைத்துப் பார்த்தேன். அதைத் தின்ன முடியாமல் தடுமாறியபொழுது பாவலர் முல்லைவாணன் தமக்கேயுரிய குழந்தையன்புடன் அவற்றைக் கொஞ்சிக்கொண்டும், விளையாடிக் கொண்டும் தீர்த்துக் கட்டிய நினைவுகள் என் நெஞ்சில் மொய்த்துக். கொண்டிருந்தன.

நான் தங்கியிருந்த அறை ஒரு நடன விடுதியின் மேற்பகுதியில் அமைந்திருந்தது. கீழே நடன விடுதி யிருந்தது. இரவு நெடுநேரம்



வரை இனிய கருவியிசை என் செவிகளில் தவழ்ந்து கொண்டிருந்தது. ''நாம் தங்கியிருக்கும் இவ்வறைக்கு என்ன வாடகை'' என்று முல்லையிடம் கேட்டேன். 'பதினான்கு வெள்ளி' என்று சொன்னார்: ''நம் உருபா மதிப்பில் எவ்வளவு?'' என்று மீண்டும் கேட்டேன். "ஏறத்தாழ 56 உருபா" என்றார், எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

அறை வளிநிலைப்பாடு(Air-condition) உடையதாகவிருந்தது. அழகிய பேழையும், மிசையும் நாற்காலிகளும் அங்கிருந்தன. நல்ல கனமான மெத்தையும், உயர்ந்த கட்டிலும் என் கண்களை அளாவின. தொலைபேசி இருந்தது. தொங்கு திரைகள், தரை விரிப்பு, வெந்நீரும் தண்ணீரும் வரும் குழாய்களும் குளிநீர்த் தொட்டியும் கண்ணாடியும் உள்ள குளியலறை இணைந்திருந்தது. 'எதற்குத் தம்பி இப்படிப்பட்ட அறை நமக்கு?'' என்று முல்லைவாணனைக் கேட்டேன். ''பெரும்பாலும் இங்குள்ள விடுதிகளில் எல்லாமே இப்படித்தான்! எவ்வளவு தரக் குறைவான அறையென்றாலும் இங்கு 10 வெள்ளிக்குக் குறைந்த அறையைப் பார்க்க முடியாது. இங்கு நான்கைந்து நாட்கள் தங்கலாம். பிறகு வேறோர் அறையை நிலையாகப் பார்த்துக் கொள்ளலாம்'' என்றார் முல்லை. ''எவ்வளவுக் கெவ்வளவு விரைவாகப்பார்க்க முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு விரைவாக வேறோர் அறையைப் பாருங்கள்'' என்று அவரிடம் கூறினேன். ''நீங்கள் இதைப்பற்றியெல்லாம் கவலைப் படவேண்டா'' என்று அமைதியாகக் கூறினார் முல்லைவாணன்.

''இந்த ஊரைப்பற்றி என்ன கருதுகின்றீர்கள், ஐயா'' என்று பின்னர், மெதுவாக என்னைக் கேட்டார் முல்லைவாணன். ''எனக் கென்னவோ, இந்த ஊர் புதிதாகப் படவில்லை தம்பி. செல்வநிலையில் மேம்பட்டு விளங்கும் ஒரு நகரம் எப்படியெல்லாம் இருக்கும் என்று நான் கற்பனை செய்திருந்தேனோ, அப்படித்தான் இந்நகரம் உள்ளது. இங்குள்ள மக்களமைப்பும், சுட்டடங்களும் எனக்குப் பார்த்துப் பழகியனவாகவே படுகின்றன. எல்லாம் அதே நிலைகள்! அதே மக்கள்! அதே அமைப்புகள்!'' என்றேன் நான். ''அப்படியா!'' என்று வியந்தார், அவர்!

—[தொடரும்]


# " தமிழ்ச்சிட்டு "

## சென்னை - 5.

( தூயதமிழ்ச் சிறுவர் கலையிதழ். )

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4-00 | 9-00 | 9-00 |
| தனியிதழ் ,, | 0-35 | 0-75 | 0-75 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

# ஏழையை உயர்த்திடப் பாடுவாய்!

—பெருஞ்சித்திரன்—

ஏடெடுக் கின்றாய்; தூவலை யெடுத்தாய்!
எந்தப் பாடலை எழுதிட நினைத்தாய்?
காடுடுக் கின்றவோர் இன்னிள வேனிலின்
காட்சியை யா? நறுங் கார்தரு மாட்சியா?
கோடுடுக் கின்றபூந் துணரின் அழகையா?
கூடிடப் பாடிடுங் குயில்களின் இசையா?
ஓடெடுக் கின்றஓர் ஏழையைப் — பாவல,
உயர்த்து கின்றநற் பாடலைப் பாடுவாய்!

ஊரெலாம் உறங்கையில் உன்விழி உறங்கா
துயிர்க்குங் கற்பனை உலுக்கிட எழுந்தாய்!
யாரெலாம் நினைந்து பாடிட முனைந்தாய்?
யாழையும் மயிலையும் பழித்தவள் அழகையா?
பாரெலாந் திரிந்துன் நினைவுப் பறவையும்
பார்த்து மகிழ்ந்திடும் எழிலையா வரைந்தாய்?
நீரிலாப் பயிரெனும் ஏழையைப் — பாவல,
நிமிர்த்தி உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்!

கருக்கொளும் கற்பனை உலகினிற் புகுந்து
காதலுங் கன்னியும் பாடிட விழைந்தாய்!
திருக்கொளும் காட்சியை நினைவுப் பசிக்கே
தீனியாய் எண்ணிநின் தூவலை எடுத்தாய்!
உருக்கொளும் மாந்தரிற் பற்பல கோடி
உணவும் உடைகளும் கூரையும் இன்றித்
தெருக்களிற் புரளும் மக்களைப் — பாவல,
தேற்றி உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்!

இலக்கணப் புலமையால் மொழிமழை பொழிந்தே
இலக்கியம் பாடிட ஏடெடுக் கின்றாய்!
துலக்கிய காட்சிகள் ஆயிரங் கோடி
தூவல் மையினால் படம்பிடிக் கின்றாய்!
புலக்கவின் கொண்டவை அவையெனப் பேசிப்
புகழ்ந்துரை யாடிப் போற்றிடச் செய்வாய்!
கலக்குறும் வறுமை மாந்தரைப் — பாவல;
கவின்கொள உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்!

காலமும் வானையும் கதிரையும் நிலவையும்
காற்றையும் மலைதரும் ஊற்றையும் கண்டு,
கோலமும் காட்சியும் உன்மனக் கூர்மையால்
கொண்ட விளக்கமும் பற்பல விண்டாய்!
ஞாலமும் நாளையும் நாளையும் பாடி
நலிவிலும் மெலிவிலும் தப்பிய துண்டா?
ஓலமும் நீருமாய் உழல்வரைப் — பாவல,
உயர்த்தி மலர்த்திடும் பாடலைப் பாடுவாய்!

விண்ணையும் மண்ணையும் உலாவரப் போந்தாய்!
வீட்டையும் நாட்டையும் விளைத்திட மறந்தாய்!
எண்ணரும் புதுமையால் செயல்பல செய்தாய்!
ஏழ்மையை விரட்டிட என்பயன் கண்டாய்?
திண்ணருஞ் சொல்லையும் பொருளையுந் திணித்துத்
தினவுறும் மனத்தினை அமைவுறச் செய்வாய்!
உண்ணரும் பசியினல் நலிவரைப் — பாவல,
ஊக்கி உயர்த்திடும் பாடலைப் பாடுவாய்!

---

*வெங்காலூர், தமிழ்ச்சங்க வெள்ளி விழா — 1974 — மலரில் வெளிவந்தது.*

---

## இலவயத் தனித்தமிழ்ப் பயிற்சி வகுப்பு

சார்பு : உலகத் தமிழ்க் கழகம், குடந்தை - நகர்க்கிளை.
இடம் : "நக்கீரர் இல்லம்" 22, நா, கீழை வீதி குடந்தை.
களம் : பாவாணர் செந்தமிழ்ப் பயிற்றகம்.
காலம் : ஞாயிற்றுக்கிழமை தோறும்.
நேரம் : இரவு 7 மணி முதல் 8-30 மணி முடிய
நோக்கு : தூய தமிழில் பேசவும் – எழுதவும் பயிற்றல்.
போக்கு : பிறமொழி போக்கலும் – பிழைமொழி நீக்கலும்.
பயிற்றுசிரியர் : கதிர். தமிழ்வாணன், குடந்தை வட்ட உலகத் தமிழ்க் கழக அமைப்பாளர்.

நகர்க் கிளைத் தலைவர் : வ. தமிழ் மாணிக்கனர்
,, செயலர் : செள. நாகவரசன்
பொருளர், பயிற்றக அமைப்பாளர் } ஆ. வயிரக்கண்ணன்

அனைவரும் வருக! துணை தருக!! பயன் பெறுக!!!

# “தென்மொழி”

## சென்னை-5.

தூய தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும்
முதல் நாளன்று வெளிவரும்.

அண்மையில் (10—2—75) மாற்றப்பெற்ற அஞ்சற் கட்டணங்களுக்குத் தக்கவாறு தென்மொழிக் கட்டணங்களும் கீழ்க் காணுமாறு மாற்றப் பெற்றுள்ளன.

| நாடு | தனியிதழ் | | ஆண்டுக் கட்டணம் | | அரையாண்டுக் கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| | நில வழி | வான் வழி | நில வழி | வான் வழி | நில வழி | வான் வழி |
| 1. இந்தியா | 1-00 | — | 12-00 | — | 6-00 | — |
| 2. இலங்கை, பர்மா, பாக்கித்தான். | 2-00 | 3-00 | 24-00 | 36-00 | 12-00 | 18-00 |
| 3. சிங்கை, மலேசியா, குவைத்து, சீனு. | 2-00 | 3-50 | 24-00 | 42-00 | 12-00 | 21-00 |
| 4. செருமனி, பிரிட்டன், பிரான்சு, உருசியா. | 2-00 | 4-50 | 24-00 | 54-00 | 12-00 | 27-00 |
| 5. இசுப்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து. | 2-00 | 5-00 | 24-00 | 60-00 | 12-00 | 30-00 |
| 6. கனடா, அமெரிக்கா | 2-00 | 5-50 | 24-00 | 66-00 | 12-00 | 33-00 |

∴ வெளிநாட்டார் இந்திய உருபா மதிப்புக்கான பிரிட்டிசு அஞ்சற் காசோலையேனும், வைப்பகக் (Bank) காசோலையேனும் அனுப்புக.

∴ இந்தியாவில் உள்ள முகவர்கள் ஓரிதழுக்கு உரு, 0-75 காசு மேனியும், அயல் நாடுகளில் உள்ள முகவர்கள் ஓர் இதழுக்கு உரு, 3-00 மேனியும் முன்பணம் கட்டுதல் வேண்டும்.

THENMOZHI.
Pure Tamil Magazine.
CHENNAI-5. (TAMIL NADU) South India.

வோர் இயக்கத்தைத் தோற்றுவிப்போமாயின், இந்நூற்றுண்டின் இறுதியில் நம் இனத்துள்ள ஒவ்வொருவருமே ஒவ்வோர் இயக்கமாக ஆகிவிடும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம்' என்று தாங்கள் வரைந்துள்ள வரிகள் பேருண்மையை விளக்குகின்றன !

காலம் காலமாக ஆரியப் பார்ப்பனர்க்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் இத் தமிழர்கள் இவ்விருபதாம் நூற்றுண்டிலும் விழிப்பற்று இருப்பார்களாஞல் இவர்களை என்னென்பது ! தன்மானமோ, தன்னுணர்வோ, தன்னறிவோ இல்லாத இச்சோற்றுப் பிண்டங்கள் உருப்படுவார்களா என்ற ஐயமும் எழுகின்றன ! செருக்கும் கிறுக்கும் இவர்களிடம் இருப்பதஞல் இனவுணர்வோ, மொழியுணர்வோ, நாட்டுணர்வோ அற்றுப் போய்விட்டனர்; தான்தோன்றித்தனமாக அறிவின்றி நடந்து கொள்கின்றனர்.

இக்கால் தாங்கள் தூக்கியிருக்கும் போர்க்கொடியை விடுதலையுணர்வை இக் குமுகாயம் ஏற்றுக்கொள்ளத் தவறுமாஞல் இனி வாழ்வே இல்லை என்று இவர்கள் என்று உணர்வார்களோ ! உணர்ந்து ஒன்றுபட்டு இயங்கிஞல் பகைக்குன்றம் தூளாகாதா ? இறை நம்பிக்கை, இறையிலி என்ற வேறுபாடெல்லாம் தூக்கி எறிய வேண்டும் ! சிறு சிறு கருத்து வேறுபாடுகள் எல்லாம் நீர்க்குமிழிகள் என மதித்து விட்டுவிட வேண்டும். அனைவரும் ஒரே கொள்கையை மனத்தில் இருத்தவேண்டும்! தமிழும் தமிழரும் தமிழகமும் விடுதலையுறவேண்டும் என்பதே அது.

—அ. பொன்னையன், தொட்டியம்.

**0 : 452 :** ஐயா, கனிந்த கை கூப்பு! கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் கடலூரில் இருந்து தாளிகைத் துறையில் புதியதொரு புரட்சி விளைவித்து வந்ததும், மொழி, இன நாட்டு வரலாறுகளில் புதியதொரு திருப்பம் உண்டாக்கி வந்ததும், இன எழுச்சி நிறைந்த இரண்டு தமிழக விடுதலை மாநாடுகளைத் துணிவுடன் நடத்தி நாட்டுரிமைக்கு வீறுமுழக்கி வந்ததுமாகிய 'தென்மொழி' யைத் தமிழகத்தின் தலைநகர்க்கு இடம் மாற்றியுள்ளதை அறிந்து பெரிதும் மகிழ்வு கொள்ளுகின்றேன். ஆம் நம் விடுதலை இயக்கம், வளர்ச்சியடையவும், இயக்கப் பணியினைச் செம்மையுடன் செயலாற்றவும் வினைத் திட்டங்களைச் சிறந்தமுறையில் முடிவுசெய்து பணியினைத் தொடரவும் ஏற்ற இடம் சென்னைதான் என்று எண்ணித் தாங்கள் எடுத்துள்ள முடிவு மிக்க நல்ல முடிவேதான். அடுத்து திருச்சி, மதுரை ஆகிய இரண்டு இடங்களில் கடந்த காலத்தில் இன எழுச்சி நிறைந்த இரண்டு விடுதலை மாநாடுகளைத் துணிவுடன் நடத்தி நாட்டுரிமைக்கு வீறு முழக்கமிட்டதைபோல் தொடர்ந்து பல விடுதலை மாநாடுகளைச் சென்னை, கோவை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சை போன்ற பலவேறு மாவட்டத் தலைநகர்களில் நடத்தி இன எழுச்சியை ஏற்படுத்தும்படி மிக்க பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். அடுத்த மாநாட்டுச் செய்தியைத் தாங்கள் 'தென்மொழி' மூலமாக அறிவிக்கும் வரை நானும் எனது துணைவியரும் விடுதலை இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் வகையில் துண்டறிக்கை, விளம்பரத் தட்டி போன்றவற்றை மக்கள் அதிகமாக கூட்டம் கூடும் பேருந்து மனை, புகைவண்டி நிலையம், மருத்துவ

[அடுத்த பக்கம் பார்க்க.]

மனை, வேலை தேடித் தரும் அலுவலகம், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் பணி செல்வோர் நுழை வாயில் போன்ற இடங்களில் எழுதி வைக்கலாம் என்று எண்ணுகின்றோம். தாங்கள் இசைவினையும், எவ்வகையாக எழுதிவைக்கலாம், துண்டறிக்கை விடலாம் என்ற தங்கள் அறிவுரையையும் பெற விரும்புகின்றோம். அடுத்து மூன்றாவது மாநாடு எங்கு நடைபெறும் என்பதையும், அதில் எங்கள் பணி என்ன என்பதையும் அறிய விரும்புகின்றோம். அப்பணியைச் செய் என்று தாங்கள் கட்டளை இட்டாலும் இட்ட பணியைச் செய்து முடிக்க நாங்கள் அணியமாயுள்ளோம் என்று கூறிக் கொள்ளுகின்றேன். நன்றி! வணக்கம். தாங்கள் கட்டளையை எதிர்நோக்கியவண்ணமிருக்கும், —கோ. கலியபெருமாள், நெய்வேலி-2.

**0 : 453 :** ஐயா, 18—5—75 அன்று தஞ்சையில் பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில், "பெரியாரும் எழுத்துச் சீர்திருத்தமும்" என்ற தலைப்பில் நமது தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த, திரு. நடன. காசிநாதன் அவர்கள் பேசினார். கி மு. 3-ஆம் நூற்றாண்டு முதல், கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில் நடைபெற்ற எழுத்துச் சீர்திருத்தங்களைக் கரும்பலகையில் எழுதி விளக்கியும், தந்தை பெரியார் அவர்கள் விரும்பிய எழுத்துச் சீர்திருத்தம் முன்பே தமிழ்நாட்டில் வழங்கி வந்துள்ளதை நோக்க வியப்பளிக்கிறதென்றும் கூறினார். மேலும், 'ஐகார' ஒலி தரும் 'ை'வுக்கும், 'ன' 'ண' போன்றவற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கவே 'ை; என்னும் ஐகார எழுத்தை திரித்து ' ஐ ' (லை) என்றாக்கினர் பழந்தமிழறிஞர்கள் என்றும் கூறினார். ஓலையில் எழுத்தாணி கொண்டெழுதும் போது இம்முறை எளிதாக இருந்திருக்கலாம் என்றார். இன்றைய உலகில் தட்டச்சு போன்ற சில அறிவியல் முறைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளும்பொருட்டு 'லை' 'ணை' போலும் ஐகார மாற்றங்களை ஏற்கலாம் என்றார். ஏனையோர் கூறும் பல்வேறு சீர்திருத்தங்களும், பழந்தமிழறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டுத்தான் இன்றைய நிலைக்குச் சுருக்கியுள்ளனர் என்றார். கடந்த "செந்தமிழ்ச் செல்வி"யில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி கட்டுரை வெளியிட்டுள்ள திரு. கொண்டல்-சு. மகாதேவன் அவர் கவனத்திற்கு இம்மடல் வந்திடவேண்டுமென விரும்புகிறேன். —இறை. மகிழ்நன், தஞ்சாவூர்.

**0 : 454 :** திருமிகு பாவலரேறு அவர்களுக்கு, தாங்கள் எம் நக்கீரர் தமிழ் மன்ற ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு ஆற்றிய சொற்பேருரையின் பொருளாழத்தினையும், கருத்துச்செறிவினையும் எம்மூர்மக்கள் வெகுவாகப் பாராட்டுவதோடு, எம்மன்றத்தையும் வெகுவாகப் புகழ்கின்றனர். இவ்வாண்டு நிகழ்ச்சி எம்மன்ற வரலாற்றில் மறத்தற்கியலாததொன்றாக அமைந்துவிட்டது.

—சூ. நா. தமிழ்நெஞ்சன், சூலூர், கோவை

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, தமிழகம்.